விலை ரூபா: 10.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பத்து

சங்கு 09 வள்ளுவர் ஆண்டு 2039 பங்குனி 26 செவ்வாய்க்கிழமை (08.04.2008) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 111




# மடு மீதான தாக்குதலை நிறுத்துவதற்கு நோர்வே அழுத்தம் கொடுக்க வேண்டும்

## விடுதலைப்புலிகள் வேண்டுகோள்

(கிளிநொச்சி)

மடுத் தேவாலயம் மீது இராணுவத்தினர் நடாத்தும் தாக்குதலை உடனடியாக நிறுத்த நோர்வே அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசன் வேண்டுகோள் விடுத்துள்ளார். இது தொடர்பில் நோர்வேயின் சர்வதேச அபிவிருத்தி அமைச்சர் எரிக் சொல்ஹெய்முக்கு நேற்றுக் கடிதம் ஒன்றையும் அனுப்பி வைத்துள்ளார்.

(02 ஆம் பக்கம் பார்க்க)

## அமைச்சர் ஜெயராஜின் கொலைக்கு ஐரோப்பிய ஒன்றியம், அமெ. கண்டனம்

(கொழும்பு)

அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே உள்ளிட்ட 15 பேரின் படுகொலைக்கு காரணமான தாக்குதல் சம்பவத்தை அமெரிக்காவும் ஐரோப்பிய ஒன்றியமும் வன்மையாக கண்டித்துள்ளன.

இது தொடர்பாக கொழும்பிலுள்ள அமெரிக்க தூதரகம் விடுத்துள்ள அறிக்கையில், பொதுமக்கள் மீதான தாக்குதலை எந்த வகையிலும் நியாயப்படுத்த முடியாது. எனவேதான் சகல வடிவிலான பயங்கரவாதத்தையும் அமெரிக்கா கண்டிக்கின்றது.

வன்முறை தொடர்வதன் மூலம் பிரச்சினைக்கு தீர்வுகாண முடியாது. இனப்பிரச்சினைக்கு அரசியல் ரீதியில் மாத்திரமே தீர்வு காணமுடியும் என சுட்டிக்காட்டியுள்ளது. அமைச்சர் ஜெயராஜிற்கு பல அமெரிக்கர்கள் நண்பர்களாக உள்ளனர். ஜெயராஜை இழந்து தவிக்கும் அவரது குடும்பத்திற்கும் மக்களுக்கும் தமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக்கொள்வதாக அமெரிக்க தூதரகம் தெரிவித்துள்ளது.

இதேவேளை இத்தாக்குதலை கண்டித்து ஐரோப்பிய ஒன்றியத்தின் வெளிவிவகார ஆணையாளர் பெனிட்டா பெரேரோ வெளியிட்டுள்ள அறிக்கையில், அமைச்சர் ஜெயராஜ் படுகொலை செய்யப்பட்ட செய்தியை அறிந்து மிகவும் அதிர்ச்சியடைந்தேன். இத்தாக்குதலை நாம் (10 ஆம் பக்கம் பார்க்க)

## குடும்பஸ்தர் இருவர் வவுணதீவில் சுட்டுக்கொலை

(மட்டக்களப்பு)

மடடக்களப்பு மாவட்டம் வவுணதீவில் நேற்றுக்காலை குடும்பஸ்தர்கள் இருவர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளனர்.

வவுணதீவு மண்டபம் அமைந்திருக்கும் பகுதியில் நேற்றுக்காலை 8.30 மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

கண்ணகிபுரத்தைச்சேர்ந்த உதயகுமார் (வயது 36), மாசிலாமணி (வயது 38) ஆகியோரே (10 ஆம் பக்கம் பார்க்க)


## அமைச்சர் ஜெயராஜின் பூதவுடலுக்கு நாடாளுமன்றத்தில் நேற்று அஞ்சலி

(கொழும்பு)

படுகொலை செய்யப்பட்ட அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளேயின் பூதவுடல் நேற்று நாடாளுமன்ற கட்டத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது.

அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளேயின் பூதவுடலுக்கு நேற்று ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, எதிர்கட்சித்தலைவர் ரணில் விக்கிரமசிங்க, அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அஞ்சலி செலுத்தினர்.

பிற்பகல் ஒரு மணியளவில் அன்னாரின் பூதவுடல் கட்டானையில் உள்ள அவரது சொந்த இல்லத்திற்கு (10 ஆம் பக்கம் பார்க்க)



நாடாளுமன்றத்தில் வைக்கப்பட்டிருந்த அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளேயின் பூதவுடலுக்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அஞ்சலி செலுத்துவதைப் படத்தில் காணலாம்.

## மடுவைக் கைப்பற்றுவதற்கான உத்திகளை ஜனாதிபதிக்குத் தெரிவித்த ஜயலத் எம்.பி.

(கொழும்பு)

மடுவுக்கு எந்தப் பாதையால் இலகுவாகச் செல்ல முடியும் என்பதனை பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜெயலத் ஜெயவர்த்தன கடந்த வியாழக்கிழமை தொலைபேசி மூலம் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு தெரிவித்திருந்தார் என்று கொழும்பிலிருந்து வெளிவரும் ஆங்கில வார ஏடான த நேசன் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் த நேசன் பாதுகாப்பு ஆய்வுப் பத்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளவற்றின் முக்கிய பகுதிகள் வருமாறு,

வடபிராந்திய கட்டளைத் தளபதிகளை பாதுகாப்புச் சபைக் கூட்டத்திற்கு அழைத்த மகிந்த ராஜபக்ஷ படை நடவடிக்கையில் எட்டப்படும் இலக்குகள் தொடர்பாக கடந்த வாரம் விளக்கியிருந்தார்.

வன்னியில் படை நடவடிக்கையில் ஈடுபட்டு வரும் மூன்று டிவி[illegible]களின் கட்டளைத் தளபதியான மேஜர் (10 ஆம் பக்கம் பார்க்க)

## முகமாலையில் விமானத் தாக்குதல்

(கொழும்பு)


முகமாலை, மாங்குளம் ஆகிய பகுதிகளில் விடுதலைப் புலிகளின் இனம் காணப்பட்ட இலக்குகள் மீது தாக்குதல் நடத்தியிருப்பதாக விமானப்படை தெரிவித் துள்ளது. மாங்குளத்திற்கு வடமேற்குப்பகுதியிலுள்ள கரும்புலிகள் பயிற்சிமுகாம் மீது இந்த தாக்குதல் நடத்தப்பட்டிருப்பதாகவும் முகமாலை முன்னரங்கப் பகுதியில் விடுதலைப்புலிகளின் (10 ஆம் பக்கம் பார்க்க)

மிதிவெடி விழிப்புணர்வு தினம் : ஏப்ரல் 1 - 14

மிதிவெடி தடை ஒப்பந்தத்தில் கைச்சாத்திட சம்பந்தப்பட்டவருக்கு அழுத்தம் கொடுப்போம்.

'சர்வோதயம்' 'யுனிசெவ்'

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்



செல்வச்சந்நிதி ஆலயத்தில் நேற்று நடைபெற்ற கும்பாபிஷேக நிகழ்வின்போது கோபுரத்துக்கு அபிஷேகம் நடைபெறுவதையும் திரண்டிருந்த பக்தர்களில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம். (படங்கள்: ரி.சுபா)

# மதவாச்சி சோதனைச் சாவடி நேற்று மீண்டும் திறக்கப்பட்டது

கம்பஹா வெலிவேரிய குண்டுத் தாக்குதலைத் தொடர்ந்து தற்காலிகமாக மூடப்பட்டிருந்த மதவாச்சி சோதனைச் சாவடி மீண்டும் திறக்கப்பட்டுள்ளது.

வெலிவேரிய பகுதியில் நேற்று முன்தினம் நடத்தப்பட்ட குண்டுத் தாக்குதலில் அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே உட்பட 15பேர் கொல்லப்பட்ட சம்பவத்தைத் தொடர்ந்து வடபகுதியிலிருந்து தென் பகுதிக்கு வருவதற்கும் தென் பகுதியிலிருந்து வட பகுதிக்கு செல்வதற்கும் மதவாச்சியில் ஏற்படுத்தப்பட்டிருந்த சோதனைச் சாவடி தற்காலிகமாக மூடப்பட்டது.

மறு அறிவித்தல்வரை மதவாச்சி சோதனைச் சாவடி திறக்கப்படாது என படையினர் அறிவித்திருந்த நிலையில் நேற்று அந்தச் சோதனைச் சாவடி மீண்டும் திறக்கப்பட்டிருப்பதாக பொலிஸார் அறிவித்துள்ளனர்.

மதவாச்சி சோதனைச் சாவடி ஊடாக மக்கள் எந்தவிதத் தடையும் இன்றி ஏ-9 வீதிக்கு செல்ல முடியும் என மதவாச்சி பொலிஸார் அறிவித்துள்ளனர். (ச-5)

# துப்பாக்கிச் சூட்டில் நால்வர் உயிரிழப்பு

(கொழும்பு)

புத்தளம் சாலியயெல பகுதியில் உள்ள மகாகம என்ற இடத்தில் ஊர்காவல் படையைச் சேர்ந்த ஒருவர் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் ஒரே குடும்பத்தைச்சேர்ந்த நால்வர் கொல்லப்பட்டுள்ளனர்.

காணிப்பிரச்சினையே இப்படுகொலைக்கு காரணம் என்று கூறப்படுகின்றது.

நேற்று அதிகாலை 12.30 மணியளவில் இடம்பெற்ற இச் சம்பவத்தால் அப்பகுதி மக்களிடையே பெரும் பதற்றம் நிலவுகின்றது.

புத்தளம் பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் ஊர்காவல் படையைச் சேர்ந்தவரே இக்கண்மூடித்தனமான தாக்குதலை மேற்கொண்டிருக்கின்றார் என்று அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர். (ச-5)

**க.பொ.த (சா/தர) பரீட்சைப் பெறுபேறுகள்**

**செங்குந்த இந்துக் கல்லூரி**

இ.சுவேந்தர் (6ஏ,பி,3சி); நீ.மயூரன் (4ஏ, 3பி,2சி எஸ்); நிரோசன் (2ஏ,3பி,3சி,2எஸ்). (ச)

# வவுனியா, மன்னார் பகுதிகளில் தொடரும் கடுமையான மோதல்கள்

வவுனியா,மன்னார், வெலி ஓயா எனப்படும் மணலாறு ஆகிய போர் முனைகளில் இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் கடுமையான சண்டைகள் தொடர்ந்து நடைபெற்று வருவதாக பாதுகாப்பு அமைச்சகம் அறிவித்திருக்கின்றது.

இந்தப் பகுதிகளில் ஞாயிறன்று இடம்பெற்ற வெவ்வேறு மோதல் சம்பவங்களில் 50க்கும் மேற்பட்ட விடுதலைப் புலிகள் கொல்லப்பட்டிருப்பதாகவும் ஒரு சில இராணுவத்தினர் காயமடைந்திருப்பதாகவும் தேசிய பாதுகாப்புக்கான ஊடகத் தகவல் மையம் கூறியிருக்கின்றது.

விடுதலைப் புலிகள் இது குறித்து உடனடியாக கருத்தெதனையும் வெளியிடாதபோதிலும் மன்னார் போர்க்கள முனைகளில் இந்த மாதத்தின் முதல் ஐந்து தினங்களில் இடம்பெற்ற சண்டைகளில் 35 இராணுவத்தினர் கொல்லப்பட்டிருப்பதாக தகவல் வெளியிட்டிருக்கிறார்கள்.

விடுதலைப் புலிகளின் மிதிவெடிகள், கண்ணிவெடிகள் போன்றவற்றில் சிக்கியவர்கள் உட்பட இந்தக் காலப்பகுதியில் 120 படையினர் காயமடைந்திருப்பதாகவும் விடுதலைப் புலிகள் தெரிவித்திருக்கிறார்கள்.

எனினும் இந்த விபரங்கள் குறித்து படைத் தரப்பிடமிருந்து தகவல்கள் எதுவும் வெளியாகவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

இதேவேளை வன்னிக் களமுனையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மோதல்களில் 10 படையினர் கொல்லப்பட்டுள்ளனர் என்றும் 24 பேர் காயமடைந்துள்ளனர் என்றும் பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது. (ச-5)

# இலங்கை வெளியிட்ட அறிக்கைக்கு அமெரிக்கா மீண்டும் கண்டனம்

(கொழும்பு)

இலங்கை அரசு மனித உரிமை மீறல்களைக் கட்டுப்படுத்தியிருப்பதாக வெளியிட்ட அறிக்கைக்கு அமெரிக்க அரசு மீண்டும் தனது கண்டனத்தை வெளிப்படுத்தியுள்ளது.

இலங்கையில் மனித உரிமை மீறல்கள் மிக மோசமடைந்து வருவதாகவும் அரசே அதற்கான முழுப்பொறுப்பையும் ஏற்க வேண்டுமெனவும் மார்ச் மாதம் அமெரிக்க அரசு வெளியிட்ட 2007ஆம் ஆண்டிற்கான வருடாந்த அறிக்கையில் கண்டனம் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இதனைத் தொடர்ந்து இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் றொபேட் ஓ பிளேக்கை அழைத்த வெளிவிவகார அமைச்சர் ரோகித போகொல்லாகம தனது அரசின் மறுப்பை வெளியிட்டிருந்தார்.

இருப்பினும் கடந்த 4ஆம் திகதி வெள்ளிக்கிழமை நியூயோர்க்கில் நடைபெற்ற இலங்கைத் தரப்பினருடனான இரண்டு மணிநேர சந்திப்பில் அமெரிக்க அரச உயர் மட்டப் பிரதிநிதிகளால் இந்த விடயம் மீண்டும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அமெரிக்க அரசின் 2007ஆம் ஆண்டுக்கான மனித உரிமை அறிக்கையில் தமிழீழ விடுதலைப் புலிகள் 18வயதுக்குட்பட்டோரை படையில் இணைப்பதை தவிர்த்து வருவதாகத் தெரிவிக்கப்பட்டிருந்தது. (ச-5)

# தாக்குதல் இடம்பெற்ற இடத்திலிருந்து அடையாள அட்டை பொலிஸாரால் மீட்பு

(கொழும்பு)

தற்கொலைக் குண்டுத்தாக்குதல் மூலம் அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே உட்பட 15பேரைப் பலிகொண்ட இடத்திலிருந்து உரிமை கோரப்படாத அடையாள அட்டை கண்டெடுக்கப்பட்டுள்ளதாக கம்பஹா பிரதேசத்திற்குப் பொறுப்பான உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் சரத் எதிர சூரிய தெரிவித்துள்ளார். இந்த அடையாள அட்டை வாழைச்சேனைப் பகுதியைச் சேர்ந்த 22 வயதுடைய இளைஞர் ஒருவருடையது எனத் தெரிவித்துள்ளார்.

இந்த சம்பவத்தில் காயமடைந்தவர்கள், கொல்லப்பட்டவர்களில் இந்த அடையாள அட்டைக்குரியவர் இருக்கவில்லை எனவும் இச்சம்பவம் தொடர்பாக இரகசியப் பொலிஸாரினால் விசேட விசாரணை இடம்பெற்று வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (ச-2)

# மடு மீதான தாக்குதலை நிறுத்துவதற்கு...

நடேசன் அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, முக்கியத்துவம் வாய்ந்த புனிதத் தலம் ஒன்றை சிதைத்து அழிப்பதில் சிங்கள அரசு காட்டும் தீவிரம் பற்றிய ஒரு கருத்தினை உங்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்பி இக்கடிதத்தினை எழுதுகிறேன்.

கடந்த ஒரு வருடகாலமாக வன்னியை ஆக்கிரமிக்கும் நோக்குடன் ஒரு பெரும்போரை சிங்கள அரசு எம்மீது தொடுத்துள்ளது என்பதை நீங்கள் அறிவீர்கள்.

வன்னியின் மேற்குப் பகுதியான மன்னார் மாவட்டத்தில் உள்ள வரலாற்று புகழ்மிக்க மடுத் தேவாலயப்பகுதியை குறியிலக்காகக் கொண்டு சிங்களப்படைகள் இராணுவ நடவடிக்கையினைச் செய்து வருவதை உலகமே அறியும்.

மடுத்தேவாலயம் நூற்றாண்டுகாலப் பழமைவாய்ந்த ஒரு திருத்தலம். மத வேறுபாடில்லாமல் தமிழ் மக்கள் அனைவராலும் வணங்கப்படும் புனிதத்தலமாக மடுத்தேவாலயம் இருந்து வருகின்றது.

அதனாலேயே போரால் இடம்பெயர்ந்த மக்கள் மத வேறுபாடு இல்லாமல் தஞ்சமடையும் ஒரு பாதுகாப்பு இடமாகவும் மடுத்தேவாலய வளாகம் இருந்து வருகிறது.

மத நல்லிணக்கத்தினதும்-மக்களின் சகிப்புத்தன்மையினதும் சின்னமாகத் தமிழர் நிலத்தில் இருந்துவரும் இந்த புனித ஆலயத்தினைச் சிதைத்து அழிக்கும் வெறித்தனத்துடன் கடந்த சில வாரங்களாக இதன் மீது சிங்களப் படைகள் குண்டுமழை பொழிகின்றன.

ஒரு புனித ஆலய வளாகம் இராணுவ இலக்காகச் சிங்களப்படை தலைமையினால் இனங்காணப்பட்டு அதனை நோக்கிப் படைநகர்வும் குண்டுத் தாக்குதல்களும் நடைபெறுகின்றன.

எனினும் உலக நாடுகள் இந்த அராஜகத்தை தடுத்து நிறுத்தவோ கண்டிக்கவோ முன்வராதிருப்பது தமிழ் மக்களை அதிருப்திக்குள்ளாக்கியுள்ளது.

பல்குழல் பீரங்கிகள் கொண்டும் ஆட்டிலறிகள், மோட்டார்கள் கொண்டும் டாங்கிகள் மூலமாகவும் சிங்களப் படைகள் புனித வளாகப் பகுதி மீது தாக்குதல்களை நடத்துகின்றன.

கண்மூடித்தனமாக நடத்தப்படும் இக் குண்டுத்தாக்குதல்களால் அங்கு தஞ்சமடைந்திருந்த ஆயிரக்கணக்கான மக்களும் ஆலய மத குருமார்களும் புகழ்மிக்க மடுமாதா சிலையுடன் இடம்பெயரவேண்டிய வரலாற்றுத் துயரம் நடந்தேறியுள்ளது.

புனித ஆலயத்தின் ஒரு பகுதி சிங்களப் படைகளின் குண்டுத் தாக்குதல்களால் சிதைவடைந்துவிட்டது.

சிங்களப் படைகளின் குண்டுத் தாக்குதல்கள் தொடர்வதால் ஆலய வளாகம் அழிக்கப்படும் அபாயம் எழுந்துள்ளது. இந் நிலையில் சமாதானத் தூதுவரான உங்கள் ஊடாக நோர்வே அரசுக்கு ஒரு வேண்டுகோளை விடுக்க விரும்புகிறேன்.

மடு புனித ஆலயப் பகுதி மீது சிங்களப் படைகள் நடாத்தும் தாக்குதலை உடனடியாக நிறுத்த நோர்வே அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும்.

உலக நாடுகளுடனும் வரலாற்றுப் புனித வழிபாட்டுத் தலங்களைப் பேணிப் பாதுகாக்கும் அமைப்புக்களுடனும் ஒன்றிணைந்து ஆலயம் மீதான தாக்குதலை தடுத்து நிறுத்தும் நடவடிக்கைகளை நோர்வே அரசு எடுக்க வேண்டும் என எமது இயக்கம் எதிர்பார்க்கிறது.

பௌத்த சின்னங்களையும், பௌத்த விகாரைகளையும் பாதுகாப்பதிலும் ஆக்கிரமிக்கப்பட்ட தமிழர் பகுதிகளில் அவற்றை நிறுவுவதிலும் பெரும் முயற்சியெடுக்கும் அரசு, ஏனைய மதங்களின் மதச்சின்னங்களைச் சிதைக்கவும், அந்த மதத்தை தழுவியுள்ள மக்களின்மனங்களைப் புண்படுத்தும் வகையில் பௌத்த அடிப்படைவாதக் கொள்கைகளைகடைப் பிடிப்பதிலும் தீவிரம் காட்டி நிற்கிறது.

எமது இயக்கத்தினைப் பொறுத்த வரையில் நோர்வே அரசு வகிக்கும் அனுசரணைப் பாத்திரத்தினை இன்னமும் நாங்கள் ஏற்றுக்கொண்டு மதிக்கின்றோம்.

இத்தகைய கோரிக்கையினை நோர்வே அரசுக்கு விடுப்பதுக்கு எங்களுக்கு உரிமை உள்ளது என்றும் நம்புகின்றோம்.

எனவே ஈழத்தமிழரின் புனிதத் தலமான மடுத்தேவாலயம் மீது சிங்களப் படைகள் தொடுத்துள்ள தாக்குதலை உடனடியாக நிறுத்த உலக நாடுகளின் துணையுடன் நோர்வே அரசு தேவையான முயற்சிகள் எடுக்கத் தூண்டும்படி உங்களைக் கேட்டுக்கொள்கிறேன் என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-5)


**மேலும் சிறப்புற வாழ்த்துகின்றோம்**



யா/நடராஜ இராமலிங்க வித்தியாலய மாணவன்

**பாலசுப்பிரமணியம் அங்குசன்**

(அச்சுவேலி)

கடந்த வருடம் நடைபெற்ற க.பொ.த (சா/தர) பரீட்சையில் 10A பெற்றமையைப் பாராட்டி விநாயகர் அருளால் கல்வித்துறையில் இன்னும் பல சாதனைகள் புரிந்திட வாழ்த்திடும்,

மு.விக்னேஸ்வரன் (குடும்பம்)
கோப்பாய்.

(சி-972)

## இன்று ஒரு தகவல்

# உயிர் கம்ப்யூட்டர்

"நான் கணக்கிலே வீக்" என்று சொல்வதற்கு எங்களில் பலர் வெட்கப்படுவதில்லை! நமது மூளை கணக்குப் போட எப்பொழுதும் தயாராகத் தான் இருக்கிறது. ஆனால் நாம் தான் அதைச் சரியாக உபயோகிப்பதில்லை. கம்ப்யூட்டர் வந்த பின் இன்னமும் சவுகரியம். கணக்குப் போடுகிற வேலையை எல்லாம் அதனிடம் ஒப்படைத்து விட்டோம்.

கம்ப்யூட்டரை விட மனிதனால் வேகமாகக் கணக்குப் போட முடியுமா என்றால் –முடியும்! ஆனால் முடியும் என நிரூபித்துக் காட்டியவர்கள் இந்த உலகத்திலே ஒரு பத்து... இருபது பேர் தான்! ஒரு பென்சிலோ , காகிதமோ இல்லாமல் 17 இலக்க எண்களைக் கூட கூட்டிக் கழித்து , பெருக்கி வகுத்து பதில் சொல்லியிருக்கிறார்கள்.

"நீங்கள் பிறந்ததிலிருந்து இந்த நிமிஷம் வரை எவ்வளவு காலம் ஆகியிருக்கிறது?" என்று கேட்டால் அரை நொடியிலே பதில் சொல்கிறார்கள்.

ஒரு புத்தகத்தைக் கொடுத்துப் படிக்கச் சொல்லி அதில் மொத்தம் எத்தனை எழுத்துக்கள் என்று கேட்டால் சரியாகச் சொல் கிறார்கள். இப்படிப்பட்ட திறமை சாலிகள் இந்த உலகத்திலே இருக்கத்தான் செய்கிறார்கள். அவர்களால் மட்டும் எப்படி முடிகிறது? இதற்குச் சரியான விளக்கத்தை இதுவரை யாருமே சொல்லவில்லை.

கணக்குப் புலிகள்– கணிதமேதைகள் –எப்படி இவ்வளவு பெரிய கணக்குகளையெல்லாம் போடுகிறார்கள் என்று கேட்டால் அதற்கு யாராலுமே சரியான விளக்கம் கொடுக்க முடியவில்லை!

இவ்வளவுக்கும் அவர்கள் கணக்குக் கல்வியை முறையாகக் கற்றுக்கொண்டவர்கள் அல்ல.

KAMYSHOVE என்னும் சோவியத் ஆய்வாளர் முதன் முறையாக இது சம்பந்தமாக ஆச்சரியமான ஒரு முடிவைச் சொல்லியிருக்கிறார். "கம்ப்யூட்டர்களையே தோற்கடிக்கக் கூடிய வேகத்திலே கணக்கப் போடும் திறமையுள்ள மூளை இயற்கையிலேயே சிலருக்கு மட்டும் தான் இருக்கிறது என்று சொல்வது சரியில்லை. இந்த உலகத்திலே பிறந்த எல்லாருடைய மூளைக்குள்ளேயும் ஒரு கம்ப்யூட்டர் மூளை இருக்கிறது" என்கிறார் அவர்.

நமது சாதாரண மூளைக்கே அபாரமான திறமை இருக்கிறது. உதாரணத்துக்கு– ஒரு மாமரத்திலே உச்சிக் கொப்பிலே ஒரு மாங்காயைப் பார்க்கிறோம். ஒரு கல்லையெடுத்துக் குறிவைத்து வீசுகிறோம். ஒரு முறை இல்லாவிட்டாலும் இன்னொரு முறை சரியாக அடித்து விழுத்தி விடுகிறோம். கண்ணிமைக்கும் நேரத்துக்குள்ளே மனித மூளை கல்லின் எடை ,மாங்காய் இருக்கும் உயரம் ,தூரம் , எறிய வேண்டிய விசையின் அளவு எல்லாவற்றையும் கணக்குப் போட்டுச் சொல்லி விடுகிறது! அதன் பின்தானே கல்லை வீசுகிறோம்! நம்மை அறியாமலே நமக்குள்ளே நடக்கிற ஒரு அதிசயம் இது.

மனிதன் படைத்த கம்ப்யூட்டராலே இவ்வளவு சிக்கல் நிறைந்த விஷயத்தை இவ்வளவு சீக்கிரத்தில் கணக்குப் போட முடியாது. அதனாலே மனித மூளைக்குள்ளே ஒரு க்ம்ப்யூட்டர் மூளை–அதாவது கணக்குப் போடுகிற மூளை இயங்குகிறது என்பதை இதிலிருந்து புரிந்து கொள்ள முடிகிறது. இதை உயிர் கம்ப்யூட்டர் என்று சொல்லலாம். (Bio -Computer)

இயற்கை , இந்த உயிர் கம்ப்யூட்டர் விசையை அணைத்து விட்டு உணர்வு மூளையின் (Consious Mind) செயற்பாட்டைத் திறந்து காட்டியிருக்கிறது.

அதனாலே உணர்வு மூளையை உபயோகிக்கும் மனிதன் தன்னுடைய இயற்கைத் திறமையை மறந்து , தானே வளர்த்துக் கொண்ட திறமையின் மூலமாக சிந்திக்க ஆரம்பித்தான். சிலருக்கு இயற்கையின் உயிர் கம்ப்யூட்டர் விசை அணைக்கப்படாமலே இருந்துவிடுகிறது. அவர்கள் தான் கணிதமேதைகள்!

நம்ம ஆள் ஒருவன் ஒரு மாமரத்தின் உச்சியிலே ஒரு மாங்காயைப்பார்த்தான். உடனே அவனுடைய மூளை கல்லின் எடை–மாங்காய் இருக்கிற உயரம்–எறிய வேண்டிய விசையின் அளவு எல்லாவற்றையும் ஒரு நொடியிலே கணக்குப் போட்டு சொல்லிவிட்டது.

கல்லால் அடித்தான். மாங்காய் விழுந்தது. இருந்தாலும் அவன் தன் மூளையை மோசமான மூளை என்று நொந்து கொண்டான்.

"ஏன்?" என்று கேட்டேன். "என் மூளை எல்லாவற்றையும் சரியாகக் கணக்குப் பேட்டுச் சொல்லிவிட்டது. ஆனால் "அந்தத் தோட்டத்திற்குச் சொந்தக்காரன் என் பின்னர் 10 அடி தூரத்தில் நிற்கினான் என்பதை என் மூளை எனக்குக் கணக்குப் போட்டுச் சொல்லாமல் விட்டுவிட்டது..." என்றான் தன் முதுகைத் தடவிக் கொண்டது!

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*





பன்றித்தலைச்சி கண்ணகை அம்மன் பங்குனித் திங்கள் உற்சவத்தில் பக்தர்கள் பொங்கலில் ஈடுபடுவதையும் அம்மன் வெளிவீதி உலா வருவதையும் படங்களில் காணலாம். *(படங்கள்: ரி.சுபா)*

# உலக சாதனை மேம்பாலத்துக்கு அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளேயின் பெயர்

## போக்குவரத்து அமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

கண்டிவீதியில்பேலியகொட, தெரணச்சந்தியில் ரயில் வீதிக்கு மேலாக அமைக்கப்பட்டுள்ள 325 மீற்றர் நீளமான மேம்பாலத்துக்கு அமைச்சர் ஜெயராஜின் பெயரைச் சூட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பெருந்தெருக்கள் போக்குவரத்து அமைச்சர் டீ.பி.ஏக்கநாயக்க தெரிவித்தார்.

படுகொலைசெய்யப்பட்ட அமைச்சர் ஜெயராஜ் நாட்டுக்குச் செய்துள்ள சேவைகளைக் கௌரவிக் கும் முகமாகவே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார். இப்பாலத்தை 61 நாட்களில் நிர்மாணித்ததன் மூலம் நெடுஞ் சாலைகள்.வீதி அபிவிருத்தி அமைச்சு உலக சாதனை ஒன்றை நிகழ்த்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(அ-5)

# முன்பள்ளிகளை பகல் பராமரிப்பு நிலையங்களாக மாற்ற ஆலோசனை

(அல்வாய்)

முன்பள்ளிகளை பகல் பராமரிப்பு நிலையங்களாக நன்னடத்தை சிறுவர் பராமரிப்பு சேவை திணைக்களத்தில் பதிவு செய்வதன் ஊடாக திணைக்களத்தின் உதவிகளைப் பெறமுடியுமென பரு.பிரதேச செயலகத்தில் நடைபெற்ற சிறுவர் கண்காணிப்புக் குழுக் கூட்டத்தில் நிகழ்ச்சித் திட்ட நன்னடத்தை உதவியாளர் எஸ்.கலைச்செல்வன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தற்போதுள்ள முன்பள்ளிப் பாடசாலைகளில், வேலைக்குச் செல்லும் பெற்றோர் தமது பிள்ளைகளைக் கொண்டு வந்துவிட்டுச் செல்கின்றனர். முன்பள்ளிகள் முற்பகல் 11.30 மணியுடன் மூடப்படுகின்றது. அதனால் பிள்ளைகளுக்கு சரியான பாதுகாப்பு கிடைப்பதில்லை. இவற்றை பகல் பராமரிப்பு நிலையமாக மாற்றினால் ஒரு முன்பள்ளிச் சிறுவனுக்கு ரூபா 100 என்ற வீதத்தில் அரச உதவி பெற்றுக்கொடுக்க முடியுமென்றும் குறிப்பிட்டார்.

(ஓ-19)

## இராசிபலன்

*08.04.2008*
*(பங்குனி 26, செவ்வாய்க்கிழமை)*
*பரணி முன்னிரவு 7.08 மணிவரை*
*திருதியை பின்னிரவு 03.13 மணிவரை*
*இராகுகாலம் 03.07-04.37 மணிவரை*
*சுபநேரம்-10.37-12.07மணிவரை*
*கார்த்திகை விரதம்*

| | |
|---|---|
| மேடம் | கடினவார்த்தை, எடுத்த காரியம் தாமதமாகும், சுபசெலவு, குடும்பக் கவலை |
| இடபம் | புதிய முயற்சி, திடீர் நன்மை, தெய்வசிந்தை, நல்லவரவேற்பு. |
| மிதுனம் | அதிகாரிகள் சந்திப்பு, சுபசெலவு, முயற்சி கைகூடும், பிரயாணம். |
| கடகம் | சகோதரர் உதவி, கீர்த்தி, காரிய அனுகூலம், தெய்வநம்பிக்கை. |
| சிங்கம் | உற்சாகம், எடுத்தகாரியம் கைகூடும், மேன்மை, பிறர்உதவி. |
| கன்னி | கட்டுப்பாடு, எடுத்த காரியம் கைகூடும், மேன்மை, பிறர் உதவி. |
| துலாம் | மனச் சஞ்சலம், தேவையற்ற பிரச்சினை, ஆரோக்கியக் குறைவு, திடீர் நன்மை. |
| விருச்சிகம் | சென்ற இடத்தில் செல்வாக்கு, உறவினர் வருகை,காரிய அனுகூலம், போசனசுகம். |
| தனுசு | மனமகிழ்ச்சி, நல்ல காரியம், அதிகாரம், போசனசுகம். |
| மகரம் | புத்திரரால் கவலை, காரிய தாமதம், திடீர் நன்மை, ரோகநிலை. |
| கும்பம் | சுபசெலவு, காரிய இடையூறு, புதிய விடயம், நண்பர்கள் சந்திப்பு. |
| மீனம் | செய்தொழில் விருத்தி, காரிய நன்மை, பிறர்உதவி, குடும்பசுகம். |

வளவன்

# க.பொ.த(சா/த) பரீட்சை பெறுபேறுகள்-2007

### வண்ணை நாவலர் மகாவித்தியாலயம்

க.ஆனந் (4ஏ, 4பி, 2சி), கே. மயூரி (3ஏ, 1பி, 4சி, 2எஸ்), ந.பதூசிகா (2ஏ, 2பி, 2சி, 4எஸ்), இ.ஆரிய குமாரி (2ஏ, 1பி, 3சி, 4எஸ்), செ.பிரசாந் தினி (ஏ. 4பி.2சி, 3எஸ்), ப. ஜெசிந் தா(ஏ. 2பி. 2சி, 5எஸ்), வி.நிலேக்கா (5சி, 3எஸ்), ச.இலட்சுமணன்(3சி.3எஸ்).

(அ-7)

### யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி

10ஏ–என்.துசிகேசன், யு.விஜித்.

8ஏ–எஸ்.ஸ்ரீசாய்சொருபன், ஆர்.பாலசயந்தன், எஸ்.ஜனனன்.

7ஏ–எஸ்.பிரகலாதன், எஸ். திவாகர், எஸ். மதுசனன், ரி.நிரோஜன்.

6ஏ–ஜெ.ஜெமில்ரன், ரி. ஜொனி, பி.அஜந்தன், பி.பிரகாஸ், எஸ்.தினேஸ்குமார், பி.சரண், எல்.சஜீவன், பி. தினாகரன், ரி.கேசவன், எம்.பிரசன்னா.

5ஏ–எஸ்.நிபோஜன், பி.காயனன், கே.சயந்தன், ஈ.மயூரன், ஆர். மயூரன், எஸ்.துஷ்யந்தன்.


(அ)

### கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி

செ.மதுரங்கன்–10ஏ, ச.வனுராகினி -(6ஏ,4பி), இ. பிருந்தா(5ஏ, 3பி, 2சி), த.இந்திரபாகுலேயன்–(5ஏ,2பி,3சி), பி.சாருஜன்–(4ஏ,3பி, 2சி,1எஸ்), த.பிறேமிளா –(4ஏ, 2பி, 4சி), பா.சபிதா–(4ஏ,3பி,3சி), கு.தாட்சாயினி–(3ஏ,3பி,4சி), தே. நிசர்சன் (-3ஏ, 1 பி,3சி, 2எஸ்),ச .மயூரா –(3ஏ, 2பி,3சி, 2எஸ்), ந. சங்கீதா–(3ஏ,2பி,3சி, 2எஸ்), ஜெ.சபிதா–(3ஏ,2பி,3சி,2எஸ்), வோ. பேமியன்ராஜ்–( 2ஏ,2பி, 3சி,2எஸ்).

க.சுமன்–(2ஏ, 2பி, 5சி), இ.கிருபாகரன்– (2ஏ,3பி,4சி,1எஸ்), பா.யரண்யா–(2ஏ,2பி,3சி,3எஸ்), சி.மனோஜ்–(2ஏ, 1பி, 4சி, 3எஸ்), க.சிவதுர்க்கா–(2ஏ,5பி,2சி), தே. சுபாகரன்–(2ஏ,4பி,3சி), ச.சாயுதன்–(1ஏ,1பி, 5சி,3எஸ்), சி.தட்சுனா–(1ஏ,4பி,2சி,3எஸ்), தி. சத்தியநிதி–(1ஏ,2பி,3சி,4எஸ்), த.தாட்சாயினி–(1ஏ,2பி,4சி,3எஸ்).

(அ)



யாழ்.லயன்ஸ் கழக பிராந்தியத் தலைவர் பி.ஆர். றஞ்சன், திருமதி றஞ்சன் ஆகியோர், யாழ்.லயன்ஸ் கழகத்திற்கு வருகை தருவதையும், கழகத் தலைவர், அங்கத்தவர்கள அருகில் நிற்பதையும் படத்தில் காணலாம்.

# வடமராட்சி வலய பாடசாலை மாணவர்களுக்கு மருத்துவ வசதி

(அல்வாய்)

மந்திகை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையால் முன்னெடுக்கப்படும் நாளாந்த சேவையை விட கடந்த மாதம் 377 சிறுவர்களுக்கு அதிபுரத பிஸ்கட் வகைகள் வழங்கப்பட்டுள்ளதாகவும், 19 அதிபோஷாக்கின்மை உள்ள சிறுவர்கள் அடையாளம் காணப்பட்டு விசேடகவனம் செலுத்தப்பட்டு வருவதாகவும், 10 பாடசாலைகளில், இதுவரை மருத்துவபரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் சிறுவர் கண்காணிப்புக் குழுக் கூட்டத்தில் பொதுச் சுகாதார பரிசோதகர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் வட இந்து மகளிர் கல்லூரியில் பற்சிகிச்சை நிலையம் ஆரம்பிப்பதற்கான கட்டட வேலைகள் இடம்பெற்று வருவதாகவும் தெரிவித்தார்.

மிக வறிய குடும்பங்களைச் சேர்ந்த பார்வைக்குறைபாடுடைய மாணவர்கள் தம்மால் இனங்காணப்பட்டுள்ள நிலையிலும் அவர்களுக்கான மூக்குக் கண்ணாடிகளைப் பெறுவதில் சிரமம் இருப்பதாகவும், அவற்றைப் பெற்று அவர்களுக்கு வழங்குவதற்கான உதவி தேவைப்படுவதாகவும் தெரிவித்தார்.

இதுபற்றி லயன்ஸ் கழகத்துடன் தொடர்பு கொண்டு இவ் உதவியைப் பெற்றுக்கொள்ள ஆவனசெய்வதாகவும் பருத்தித்துறை பிரதேச செயலாளர் தெரிவித்தார். (ஓ-19)



பருத்தித்துறை தும்பளை சைவப் பிரகாச மகா வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டியை பருத்தித்துறை இலங்கை வங்கி முகாமையாளர் கே.பி. ஆனந்தநடேசன் மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைப்பதையும் அதிபர் எஸ்.யோகநாதன், பிரதம விருந்தினரான அசெம்பிளி ஒவ் கோட் போதகர். எஸ்.சிதம்பரப்பிள்ளை, சிறப்பு விருந்தினரான என். நற்குணம் ஆகியோர் அருகில் நிற்பதையும் படத்தில் காணலாம். (படம்:-பரு .நிருபர்)

# பழுதடைந்த உணவுப் பொருட்களை பாடசாலையிலிருந்து மீளப்பெற நடவடிக்கை

(அல்வாய்)

பாடசாலைகளுக்கு விநியோகிக்கப்பட்ட பழுதடைந்த(C.S.B) சோளம், சோயா மாவு மீளப்பெறப்படவுள்ளது. பருத்தித்துறை, கரவெட்டி கல்விக் கோட்டங்களில் பழுதடைந்தது என பொதுச் சுகாதார பரிசோதகரால் உறுதிசெய்யப்பட்ட (C.S.B) சோளன் சோயா மாவை மாவட்ட புனர்வாழ்வு புனரமைப்பு செயலகத்தினால் 14.04.2008 அன்று மீளப் பெறுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

எனவே தங்கள் பாடசாயையில் உள்ள பழுதடைந்த மாவை மீளப் பெறுவதற்கு வசதியாக புலோலி மெ.மி.த.க.பாடசாலையில் 11 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 8.30 -11.30 மணிக்கு ஒப்படைக்குமாறு வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா கேட்டுக்கொள்கின்றார். (ஓ-19)

# வடமராட்சி கல்வி வலயத்தில் கட்டாயக் கல்விக் குழு செயற்பாடுகள்

(அல்வாய்)

மேலைப்புலோலி பாடசாலை அதிபர் முன் மாதிரியாக செயற்பட்டு பிறப்பு சான்றிதழ்கள் இல்லாத பிள்ளைகளையும் பாடசாலையில் அனுமதித்து பின்னர் பிறப்புச் சான்றிதழ்களைப் பெற்றுக்கொடுக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளார் என சிறுவர் கண்காணிப்புக் குழுக்கூட்டத்தில் வடமராட்சி வலய முறைசாராக் கல்விப் பிரிவு உதவிக் கல்விப் பணிப்பாளர் த.தபேந்திரராஜா தெரிவித்தார்.

வடமராட்சி வலயத்தில் உள்ள 78 பாடசாலைகளில் இதுவரை தம்மால் 50 பாடசாலை வரவுப் பதிவேடுகள் ஆராயப்பட்டு பாடசாலையில் இருந்து இடைவிலகிய, வரவு குறைந்த 64 மாணவர்கள் இனங்காணப்பட்டு அவர்களின் வீடுகளுக்குச் சென்று அவர்களை பாடசாலையில் மீள இணைக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டதாக தெரிவித்ததுடன், இதற்கான காரணங்களாக இடப்பெயர்வு, பிறப்புச் சான்றிதழ் இல்லாமை ஆகியன அமைந்ததாகக் குறிப்பிட்டார்.

ஒப்பீட்டளவில் மாணவர் இடைவிலகல் தற்போது குறைந்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

அத்துடன் மெல்லக் கற்கும் பிள்ளைகளுக்கான வகுப்புகள் சீராக நடைபெற்று வருவதாகவும், 2008ஆம் ஆண்டு முறைசாராக் கல்வியின் கீழ் 5 வகை யான தொழில்பயிற்சிகள் வழங்கப்பட்டு வருவதாகத் தெரிவித்ததுடன் கரவெட்டி கப்பூது கிராமத்தில் சேலைகளுக்கு வேலைப் பாடு செய்யும் பயிற்சிநெறி வழங்கப்பட்டு தற்போது அதில் சிறப்புத் தேர்ச்சி பெற்றிருப்பதால் போரூட் நிறுவனம் அவைகளுக்கான சந்தைப்படுத்தல் வசதிகளைச் செய்து கொடுக்க முன்வந்துள்ளதாகவும் தெரிவித்தார்.

பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவிலும் முறைசாரா பயிற்சி நெறிக்கான இயந்திர. தளபாட வசதிகளைச் செய்து தரவேண்டுமெனவும் பருத்தித்துறை பிரதேச செயலாளரிடம் கேட்டுக் கொண்டார். (ஓ-19)



உரும்பிராய் கிழக்கு கண்ணகா ஸ்ரீ பரமேஸ்வரி கண்ணகை அம்மன் தேவஸ்தானத்தில் மகாசிவராத்திரி தினத்தன்று நடைபெற்ற பட்டிமன்ற நிகழ்வில் 2005 இல் தேசிய மட்டப் போட்டியில் வெற்றியீட்டிய ப.வினூசியனுக்கு ஆலய நிர்வாக சபை உறுப்பினர் எம்.வரதராஜன் பரிசு வழங்கிக் கௌரவிக்கிறார்.

## ஆக்கத்திறன் கண்காட்சி

திக்கம் மத்திய சனசமூக நிலையம் முன்பள்ளி மழலைகளின் ஆக்கத்திறன் கண்காட்சி சனசமூக நிலையத் தலைவர் கே. சோதிநாதன் தலைமையில் இன்று செவ்வாய்க்கிழமை திக்கம் மத்திய சனசமூக நிலைய கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பருத்தித்துறை பிரதேச முன்பள்ளி ஆசிரியர் சங்க ஆலோசகர் ஆ.நா.சு. திருச்செல்வம் விழாவிலே முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டு ஆக்கத்திறன் கண்காட்சியைச் சம்பிரதாய பூர்வமாகத் திறந்துவைப்பார்.

வடமராட்சி கல்வி வலய ஆரம்பக்கல்வி உதவிக்கல்விப் பணிப்பாளர் திருமதி. பி.கமலாம்பாள் சிறப்புவிருந்தினராகக் கலந்துகொள்கிறார். வடமராட்சி வலய முன்பள்ளி கல்வி இணைப்பாளர் திருமதி கே.சுரேஸ், பருத்தித்துறை பிரதேச முன்பள்ளி இணைப்பாளர் திருமதி ஆர்.தவலட்சுமிதேவி, பருத்தித்துறை முன்பள்ளிகளின் ஆசிரியர் சங்கத் தலைவி செல்வி. பீ.நாகசோதி ஆகியோர் கௌரவவிருந்தினர்களாகவும் கலந்துகொள்கின்றனரென சனசமூக நிலையச் செயலாளர் அறிவித்துள்ளார். (அ-52)

## கலைத்திறன் காண்விழா

வல்வெட்டித்துறை கொத்தணி முன்பள்ளிகளின் கலைத்தறன் காண்விழா நாளை புதன்கிழமை மு.ப 11 மணிக்கு தொண்டைமானாறு வீரகத்திப்பிள்ளை மகாவித்தியாலயத்தில் வல்வை கொத்தணி முன்பள்ளிகள் தலைவர் மு. ரவீந்திரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக தொண்டைமானாறு வீரகத்திப்பிள்ளை மகாவித்தியாலய அதிபர் வ. கணேசமூர்த்தியும், சிறப்பு விருந்தினர்களாக வடமராட்சி வலய முன்பள்ளிகள் இணைப்பாளர் எஸ். சுரேஸ், பருத்தித்துறைமுன்பள்ளிகள் இணைப்பாளர் ரி.ரவீந்திரன் ஆகியோரும் கலந்துகொள்ள வுள்ளனர். (ஓ)

## நுண்ணறிவுப் பரீட்சை

இலங்கை, ஊவா வெல்லெச பல்கலைக்கழக அனுமதிக்கான நுண்ணறிவுப் பரீட்சை, யாழ். மாவட்ட பரீட்சார்த்திகளின் நலன் கருதி இம்மாதம் 10, 11ஆம் (வியாழன், வெள்ளி) யாழ்ப்பாணம் வைத்தீஸ்வராக் கல்லூரியில் நடத்தப்படவுள்ளது.

இப் பரீட்சைக்கு தோற்ற விரும்பும் பரீட்சார்த்திகள் தங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்ட கொழும்பு பரீட்சை நிலையங்களில் பெயர்களைத் தாங்கிய அனுமதி அட்டைகளை பரீட்சை நிலையத்திற்கு எடுத்துச் சென்று பயன்படுத்தலாம் எனவும்,

அதேநேரம் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பரீட்சார்த்திகள் கொழும்பிலுள்ள பரீட்சை நிலையங்களில் பரீட்சைக்குத் தோற்ற விரும்பினால் அனுமதி அட்டையில் குறிப்பிடப்பட்ட பரீட்சை நிலையங்களில் பரீட்சைக்குத் தோற்றலாம் எனவும் பரீட்சை ஆணையாளர் நாயகம் அநுரஎதிரிசிங்க அறிவித்துள்ளதாக யாழ். அரசாங்க அதிபர் அறிவித்துள்ளார். (ஓ)

## தீயணைப்பு சேவை இடைநிறுத்தம்

யாழ்ப்பாணம் மாநகரசபையின், மிகப் பழமைவாய்ந்த தீயணைப்பு வாகனத்தின் திருத்த வேலைகள் நடைபெற்றுவருவதால், இத் திருத்த வேலைகள் முழுமைபெறும் வரை, தீயணைப்பு வாகனம் சேவையில் ஈடுபடாது என யாழ்.மாநகரசபை செயலாளர் இ.இரத்தினசிங்கம் அறிவித்துள்ளார். (ஓ)

## நெடுந்தீவு ஆசிரியர்களுக்கு அம்புலன்ஸ் படகுச் சேவை

(யாழ்ப்பாணம்)

நெடுந்தீவிலுள்ள பாடசாலைகளில் கடமையாற்றும் வெளியிடங்களைச் சேர்ந்த ஆசிரியர்களின் போக்குவரத்து சேவைக்கென அம்புலன்ஸ் படகுச் சேவையை ஹியூமெடிக்கா நிறுவனம் ஏற்பாடு செய்துள்ளது.

இதுவரை காலமும் வரையறைக்குட்பட்ட விதத்தில் நடத்தப்பட்டு வந்த படகுச் சேவைகளால் நெடுந்தீவிலுள்ள பாடசாலைகளில் கடமையாற்றும் ஆசிரியர்கள் பெரும் சிரமத்தை எதிர்கொண்டு வந்தனர்.

இந்நிலையில் நெடுந்தீவுக் கல்விக் கோட்ட அதிகாரி கே. அரசரத்தினம் எடுத்துக் கொண்ட முயற்சிகளின் பயனாக இப் புதிய படகு சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (அ-5)

## யாழ்.விஞ்ஞானச் சங்க கருத்தரங்குத் தொடர்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம் -பிரிவு D (சமூக விஞ்ஞானம்) நடாத்தும் கருத்தரங்குத் தொடரில், இன்று செவ்வாய்க் கிழமை மு.ப.11 மணிக்கு, யாழ்.பல்கலைக்கழக கலைப் பீட புதிய கட்டடத் தொகுதியில் அமைந்துள்ள விரிவுரை மண்டப இலக்கம் 108 இல் "புத்தாக்கத்திறனை வளர்ப்பதற்கான சூழலும் உளவியல் முறைகளும்" என்ற பொருளில் வணபிதா. இராசேந்திரம் ஸ்ரலின் (Msc. Guid. & Couns.) அனைவரையும் கலந்து கொள்ளுமாறு யாழ்ப்பாணவிஞ்ஞான சங்கம் அறிவித்துள்ளது. (அ)

## குருபூசை தினத்தை முன்னிட்டு மாணவர்களிடையே போட்டிகள்

(மருதங்கேணி)

மேலைப்புலோலி சதாவதானி கதிரவேற்பிள்ளையின் குருபூசை தினத்தை முன்னிட்டு பாடசாலை மாணவர்களிடையே நடாத்தப்படும் மனனம், பண்ணிசைப் போட்டிகள் எதிர்வரும் 19, 20ஆம் திகதிகளில் தம்பசிட்டியிலுள்ள சதாவதானி கதிரவேற்பிள்ளை மண்டபத்தில் நடைபெறும்.

பாலர். வகுப்பு முதல் 5ஆம் வகுப்பு மாணவர்களிடையே மனனம், பண்ணிசைப் போட்டிகளும் தரம் 6 முதல் 11 வரையான மாணவர்களிடையே அவதானம், பொது அறிவுப் போட்டிகள் நடைபெறும்.

போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கு பரிசில்கள் சதாவதானி கதிரவேற்பிள்ளை குருபூசை தினத்தன்று வழங்கப்படும். (அ-35)

## வருடாந்த பொங்கல்

(மருதங்கேணி)

மேலைப்புலோலி வாணக் குடியிருப்பு சொக்கன் கலட்டி ஸ்ரீ முத்துமாரியம்மன் கோவில் வருடாந்த பொங்கல் உற்சவம் இன்று செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகி நாளை புதன்கிழமை மு.ப.10.30 மணிக்கு விஷேட பூசைகள் நடைபெற்று 12மணியளவில் நிறைவுபெறும். (அ-35)



# முஷாரப்பின் அதிகாரத்தைக் குறைக்க அரசியல் சட்டத்தில் திருத்தம்

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தான் அதிபர் முஷாரப்பிடம் உள்ள பல முக்கிய அதிகாரங்களை குறைக்கும் வகையில் அரசியல் சட்டத்தில் திருத்தங்களைக் கொண்டுவர பாகிஸ்தானில் புதிதாக பொறுப்பேற்றுள்ள கூட்டணி அரசு முடிவு செய்துள்ளது.



இதன் மூலம் அதிபர் முஷாரப்பிடம் தற்போதுள்ள ,அவசர நிலையை பிரகடனம் செய்வது நாடாளுமன்றத்தைக் கலைப்பது உள்ளிட்ட அதிகாரங்கள் பறிக்கப்படும்.

இது குறித்து பாகிஸ்தானின் 'டான்' நாளிதழ் வெளியிட்டுள்ள செய்தியில், 'பாகிஸ்தானில் விரைவில் நடைபெறவுள்ள நாடாளுமன்றக் கூட்டத்தொடரில் அரசியல் சாசன சட்டத்தில் முக்கிய திருத்தங்கள் கொண்டு வரப்படும்.

நீதிபதிகளை நியமிக்கும் நடைமுறைகள், மாகாணங்களுக்கு அளிக்கப்படும் ;உரிமைகள் போன்ற சட்டங்களில் எந்த ஒரு தனி நபரும் குறுக்கிட முடியாத வகையில் திருத்தங்கள் ஏற்படுத்தப்படும்.

பாகிஸ்தான் அதிபருக்கு தற்போது உள்ள வானளாவிய அதிகாரங்கள் பறிக்கப்படும். மாகாண ஆளுநர்களை நியமிப்பது, முப்படை தலைவர்கள் பதவி போன்றவற்றில் அதிபருக்கு உள்ள அதிகாரங்கள் குறைக்கப்படும் இனி அதிபர் பதவி என்பது பெயரளவில் மட்டும் தான் இருக்கும். இது பாகிஸ்தான் நாடாளு மன்றத்தின் இரு அவைகளிலும் கொண்டு வரப்படும் 18ஆவது அரசியல் சட்டத்திருத்தம்' என்று குறிப்பிட்டுள்ளது.

சட்டத்திருத்தத்துக்குபின் அதிபர் நிராயு தபாணியாக காணப்படுவார். நாடாளுமன்ற நடவடிக்கைளில் அவர் தலையிட முடியாது என ஆளும் கூட்டணி கட்சியான பாகிஸ்தான் மக்கள் கட்சி மற்றும் பாகிஸ்தான் முஸ்லிம் லீக் (என்) கட்சியின் முக்கிய தலைவர்கள் கூறியுள்ளனர்.

பாகிஸ்தானில் கடந்த ஆண்டு பதவி நீக்கம் செய்யப்பட்ட நீதிபதிகளை மீண்டும் பதவியில் அமர்த்தவும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிகிறது.

(அ-5)

# அநேகமாக அனைத்து நாடுகளிலும் பெண்கள் பாரபட்சத்திற்கு உள்ளாகிறார்கள்

## ஐக்கிய நாடுகள் சபை அறிக்கை

உலகெங்கும் அநேகமாக அனைத்து நாடுகளிலும் பெண்கள் பாரபட்சத்திற்கு உள்ளாவதாக ஐக்கிய நாடுகள் சபை அறிக்கையிட்டுள்ளது.

கடந்த 2005ஆம் ஆண்டுக்குள் ஆண்களுக்கு சாதகமாகவுள்ள சட்டங்களை இல்லாதொழிப்பதாக ஐக்கிய நாடுகள் சபையின் 185 அங்கத்துவ நாடுகள் ஏற்கனவே உறுதி பூண்டிருந்த நிலையிலேயே இப்பாராபட்சம் நீடிப்பதாக தெரிவிக்கிறது.

உலகில் வறுமைக்கோட்டிக்குக்கீழ் வாழ்பவர்களில் 70சதவீதமானவர்கள் பெண்கள் எனவும் அவர்களில் ஒரு சதவீதமானவர்களே தமது பெயரில் நிலவுரிமையைக் கொண்டிருப்பதாகவும் ஐக்கிய நாடுகள் சபையின் அறிக்கை தெரிவிக்கிறது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளர் லூயிஸ் ஆர்பருக்கு சமர்ப்பிக்கும் முகமாக தயாரிக்கப்பட்ட மேற்படி அறிக்கை தூர கிழக்கு மற்றும் ஆபிரிக்க ஆய்வுகளுக்கான லண்டன் பாடசாலையில் சட்டப்பேராசிரியாரான பரெடா பன்டாவால் தொகுக்கப்பட்டது.

உலகின் 53 நாடுகளில் திருமணத்திற்கு முன்னரான பாலியல் வல்லுறவு ஒரு குற்றச் செயலாகவே கருதப்படவில்லை எனத்தெரிவிக்கப்படுகிறது. ஜெனிவாவில் நடைபெற்ற பத்திரிகை மாநாடு ஒன்றில் பேராசிரியர் பரெடா பண்டா விளக்கம் அளிக்கையில், விவகாரத்து, தாய்மைக்கான நன்மைகள் மற்றும் ஓய்வூதியம் உள்ளடங்களலான விடயங்களில் பெண்களுக்கு பாராபட்சம் காட்டுவதாக உலக நாடுகள் பலவற்றின் சட்டவிதிகள் உள்ளதாகக்கூறினர்.

மேலும் உலக நாடுகள் பெண்களின் திருமண வயது தொடர்பில் வேறுபாடான கொள்கைகளை கடைப்பிடிப்பதாகவும் ஆண்களை விட பெண்கள் மிக இளவயதில் திருமண வாழ்க்கையில் ஈடுபட நிர்ப்பந்திக்கப்படுவதாகவும் அவர் தெரிவித்தார். இந்நிலைமை காரணமாக பல பெண்கள் 14 வயதில் திருமணப்பந்தத்தில் ஈடுபட கட்டாயப்படுத்தப்படுவதால் அவர்களது கல்வி பாதிக்கப்படுவதுடன் மிக இளவயதிலான மகப்பேறு அவர்களது உடல் ஆரோக்கியத்திற்கும் அச்சுறுத்தலாக அமைவதாக அவர் குறிப்பிட்டார்.

(அ-5)

# இறுதிச் சடங்கில் குண்டு வெடிப்பு ஈராக்கில் 15 பேர் பலி

(பக்தாத்)

ஈராக்கில் மூசல் அருகே உள்ள ஒரு கிராமத்தில் அந்த வழியாக சென்ற 2 பஸ்களை தீவிரவாதிகள் மறித்து நிறுத்த முயன்றனர். அதில் முதலில் சென்ற பஸ் நிற்காமல் வேகமாக சென்று விட்டது. அடுத்து வந்த பஸ் நின்றது. அதில் இருந்த பல்கலைக்கழக மாணவர்கள் 42 பேரை தீவிரவாதிகள் சிறைப்பிடித்தனர். அவர்கள் கடத்திச் செல்லப்பட்டனர்.

இந்த சம்பவத்துக்கு எந்த ஒரு அமைப்பும் பொறுப்புஏற்கவில்லை. அல்கொய்தா அமைப்புதான் இதை செய்து இருக்க வேண்டும் என்று கூறப்படுகிறது.

ஈராக்கின் 3ஆவது பெரிய நகரமான மூசல் தான் அல்கொய்தாவுக்கு செல்வாக்கு உள்ள கடைசி இடம் ஆகும். கடைசியாக கிடைத்த தகவலின்படி சிறைப்பிடிக்கப்பட்ட 42 மாணவர்களும் சில மணி நேரங்களுக்குப் பிறகு விடுவிக்கப்பட்டனர்.

இதற்கிடையில் சன்னி பொலிஸ்காரர் ஒருவர் இறந்து போனார். அவரது இறுதிச் சடங்கில் கலந்துகொள்ளவந்தவர்கள் மத்தியில் இருந்த தற்கொலை தீவிரவாதி ஒருவர் வெடி குண்டுகளை வெடிக்கச் செய்ததில் 15 பேர் பலியானார்கள்.

(அ-5)

# ஐதரசனால் சக்தியூட்டப்பட்ட விமானம் விமானியுடன் பறந்து சாதனை

ஐதரசன் வாயுவால் சக்தியூட்டப்பட்ட விமானமொன்று விமானியொருவருடன் வெற்றிகரமாகப் பறந்த முதலாவது சம்பவம் ஸ்பெயின் வான் பரப்பில் இடம்பெற்றுள்ளது.

இதற்கு முன்பு ஐதரசனால் சக்தியூட்டப்பட்ட ஆளில்லாத விமானங்களை பறக்கவிடும் பரீட்சார்த்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டபோதும் விமானியொருவருடன் இத்தகைய விமானமொன்று பயணம் செய்தமை உலக விமானப் போக்குவரத்து வரலாற்றில் இதுவரையும் இடம்பெறாத நிகழ்வாகும்.

இந்த சிறிய ரக விமானமானது விமானத்துறையில் ஜாம்பவானாக விளங்கும் போயிங் நிறுவனத்தால் உருவாக்கப்பட்டிருந்தது.

சுற்றுச் சூழல் நடப்புறவான புதிய தலைமுறை விமானங்கள் எதிர்காலத்தில் உருவாக்கப்படுவதற்கு வழிவகுக்கும் அனு கூல சமிக்ஞையாக இந்தவிமானபரீட்சார்ந்தபறப்புநடவடிக்கையின் வெற்றி அமைவதாக போயிங் நிறுவனம் தெரிவித்தது.




இது வரலாற்று முக்கியத்துவ தொழில்நுட்ப சாதனையாகும் என போயிங் நிறுவனத்தின் தலைமை தொழில்நுட்ப உத்தியோகஸ்தர் ஜோன் ரெசி தெரிவித்தார்.

(அ-5)

# பிரித்தானிய படையினருக்கு மகாபாரத போதனை

(லண்டன்)

பிரித்தானியா இராணுவத்தின் முதலாவது இந்துமத போதகரான கிரிஷான் அத்திரி ஈராக் மற்றும் ஆப்கானிஸ்தானுக்குச் செல்லும் பிரித்தானிய படையினருக்கு மகாபாராத போதனையை வழங்கி வருவதாகத்தெரி விக்கப்படுகிறது.



2005ஆம் ஆண்டு நவம்பர் மாதம் பிரித்தானிய இராணுவத்திற்கான போதனைகளை வழங்க நியமிக்கப்பட்ட பிற சமயங்களைச் சேர்ந்த 4 போதனையாளர்களின் ஒருவராக கிரிஷான் விளங்குகிறார்.

இந்நிலையில் பௌத்த மதபோதனையை சுனில் காரிகரவண்ணனும் இஸ்லாமிய மத போதனையை இமாம் அஸின் ஹபிஸும் வழங்குகின்றமை குறிப்பிடத்தக்கது.

இது தவிர வழமையான கிறிஸ்தவ மத போதனைகளில் 300 போதகர்கள் ஈடுபடுகின்றமை குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் ஈராக் மற்றும் ஆப்கானிஸ்தானுக்கு செல்லும் பிரித்தானிய இந்துமதபடையினருக்கு பகவத்கீதையை பயன்படுத்தி போதனைகளை வழங்குவதாக கிரிஷான் கூறினார்.

பிரித்தானிய இராணுவத்தில் 470 இந்து சமயத்தவர்கள் பணியாற்றுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

'கடவுள் நாட்டை பாதுகாக்கவும் உலகில் சமாதானத்தை பேணவும் வாய்ப்பொன்றைத்தந்துள்ளார். படை வீரர்கள் எவரையும் கொல்லவில்லை. அவர்கள் தமது கடமையை நிறைவேற்றுகிறார்கள்' எனக்கூறிய கிரிஷான் 'கடமையே எமது பிரதானமாகும் இது எமது கர்ம வினையாகும். அதை நாங்கள் எதிர்கொள்ள வேண்டும் என்று தெரிவித்தார்.

(அ-5)

# ஒலிம்பிக் ஜோதியை அணைக்க முயற்சி லண்டனில் 18 பேர் கைது

(லண்டன்)

சீனாவுக்கு எதிர்ப்பு தெரிவித்து ஒலிம்பிக் ஜோதியை அணைக்க திபெத்தியர்கள் முயற்சி செய்தனர். இதனால் லண்டன் ஓட்டத்தில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது. வரும் ஓகஸ்டில் (8-24) சீன தலைநகர் பீஜிங்கில் 29 ஆவது ஒலிம்பிக் போட்டி நடக்கவுள்ளது. இதில் திபெத் மற்றும் தைவான் அணிகள் சேர்ந்து ஒருங்கிணைந்த சீன அணியாக கலந்து கொள்ளும் என சீனா அறிவித்தது. இது விடுதலை கோரி போராடி வரும் திபெத்தியர்கள் மத்தியில் கோபத்தை ஏற்படுத்தியது. தங்களது மண்ணில் இருந்து சீனா வெளியேற வேண்டுமென போராட்டம் நடத்தினர். இவர்கள் மீது சீனா நடத்திய தாக்குதுலில் நூற்றுக் கணக்கானோர் கொல்லப்பட்டனர்.

இதையடுத்து ஒலிம்பிக் போட்டியை புறக்கணித்து ,சீனாவுக்கு பதிலடி கொடுக்க வேண்டுமென மனித உரிமை அமைப்புகள் கோரிக்கை விடுத்தன. இத்தகைய பிரச்சினைகளை கடந்து ஒலிம்பிக் ஜோதி தனது உலக பயணத்தை துவக்கியது. மொத்தம் 135 நகரங்களுக்கு கொண்டு செல்லப்படவுள்ளது. இந்த ஜோதி நேற்று முன்தினம் பிரிட்டன் தலைநகர் லண்டனுக்கு வந்தது. இங்குள்ள வெம்ப்ளி மைதானத்தில் இருந்து ஒலிம்பிக் ஜோதி ஓட்டம் துவங்கியது. பல்வேறு துறையை சார்ந்த பிரபலங்கள் மாறி மாறி ஜோதியை ஏந்தி வந்தனர். ஒரு கட்டத்தில் டிவி தொகுப்பாளினி கோனி ஹக்வசம் ஜோதி கொடுக்கப்பட்டது. இவர் ஓடி வரும் போது, திபெத்திய போராட்ட குழுவை சேர்ந்த ஒருவர் திடீரென பாய்ந்தார்.

ஜோதியை அவரது கையில் இருந்து பறித்துச் செல்ல பார்த்தார் .உடனே பொலிஸார் அவரை பிடித்து கீழே தள்ள, அந்த பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது. ஒரு வழியாக இவர் அப்புறப்படுத்தப்பட்டார். பின்னர் ஹாலண்ட் பார்க் அருகே சிலர் ஜோதியை அணைக்க முற்பட்டனர். இந்த முயற்சியும் தடுக்கப்பட்டது. புளூம்ஸ்பரி அருகே 3 பேர் கொண்ட கும்பல் ஒலிம்பிக் ஓட்டத்தை தடுக்க பார்த்தது. இதனால் ஓட்டம் சிறிது நேரம் நிறுத்தப்பட்டது. பின்னர் ஒலிம்பிக் ஜோதி தனது நீண்ட பயணத்தை தொடர்ந்தது. இப்போராட்டத்தை வழிநடத்திய புத்த துறவி நகவாவாங் கியாண்ட்சே கூறுகையில், திபெத்தில் நிலைமை மிகவும் மோசமாக இருக்கிறது. ஒலிம்பிக் துவங்கும் இந்த நேரத்தில் உலக நாடுகள் சீன அரசுக்கு நெருக்கடி கொடுக்கவேண்டும் என்றார்.




லண்டன் வந்த ஒலிம்பிக் ஜோதி பலத்த பாதுகாப்புடன் கொண்டு வரப்படுகிறது.

பிரதமர் மறுப்பு :ஒலிம்பிக்கை புறக்கணிக்க பிரிட்டன் பிரதமர்கோர்டன் பிரவுன் மறுத்து விட்டார் .இது குறித்து இவர் கூறுகையில் திபெத்திய தலைவர் தலாய்லாமா ஒலிம்பிக்கை புறக்கணிக்கவேண்டாம் என அறிவுறுத்தியுள்ளார். எனவே ஒலிம்பிக் ஜோதி ஓட்டத்துக்கு எதிர்ப்பு தெரிவிக்க இயலாது என்றார்.

லண்டனில் ஓட்டம் துவங்கியதில் இருந்து முடியும் வரை திபெத்தியர்கள் மற்றும் மனித உரிமை அமைப்புகள் சாா்பில் ஆங்காங்கே ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்பட்டன. பலத்த பாதுகாப்பையும் மீறிவ்ழிநெடுகிலும் இடையூறு செய்து கொண்டே இருந்தனர். ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டது தொடர்பாக 18பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

(அ-5)

# பிரேசிலில் கடும் மழை 15 பேர் பலி

(சாயோபோலோ)

வடகிழக்கு பிரேசிலில் கடும் மழைகாரணமாக இடம்பெற்ற வெள்ளப்பெருக்கில் குறைந்தது 15 பேர் பலியானதுடன் 50ஆயிரம் பேருக்கும் அதிகமானோர் தமது வீடு வாசல்களை விட்டு இடம்பெயர்ந்துள்ளனர்.

இந்நிலையில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவும் வகையில் 260 மில்லியன் அமெரிக்க டொலர் நிதியை ஒதுக்கீடு செய்வதற்கான உத்தரவை ஜனாதிபதி லூயிஸ் இனாசியோர் லூடா சில்வா பிறப்பித்துள்ளார்.

பரெய்பாவிலுள்ள ஆறு அணையை உடைத்துக் கொண்டு பெருக்கெடுத்ததில் 15 பேர் நீரில் மூழ்கி பலியாகியுள்ளனர்.

மேலும் அப்பிரதேசத்தில் மட்டும் 14ஆயிரம் பேர் தமது வீடுவாசல்களைவிட்டு இடம் பெயர்ந்துள்ளனர்.

மேலும் பியயுயி மாநிலத்தில் சுமார் 30 நகரங்களில் நீரில் மூழ்கியதுடன் 19ஆயிரம் பேருக்கும் அதிகமானோர் இடம்பெயர்ந்துள்ளனர்.

அத்துடன் பேர்னம்புகோ மற்றும் சியரா ஆகிய மாநிலங்களில் சுமார் 7500பேர் வெள்ளம் காரணமாக இடம்பெயர்ந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

(அ-5)

## உலக தரிசனம்

# மடுமாதாவின் இடப்பெயர்வு! அரசியல் வட்டாரங்கள் அதிர்ச்சி!!

(கொழும்பு)

இலங்கையின் அரசியல் வட்டாரங்களில் மடு மாதாவின் இடப்பெயர்வு அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளதாக கொழும்பிலிந்து வெளிவரும் "லக்பிம" ஆங்கில வார ஏடு தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் "லக்பிம" வார ஏட்டில் வெளிவரும் பாதுகாப்பு ஆய்வுப்பத்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளவற்றின் முக்கிய பகுதிகள் வருமாறு ,

மடுவை அண்டிய பகுதிகளில் மோதல்கள் உக்கிரமடைந்துள்ள நிலையில் மிகவும் பழமைவாய்ந்த கன்னிமாத சொரூபம் ஆலயத்திலிருந்து அகற்றப்பட்டுள்ளதான செய்திகள் கடந்த வியாழக்கிழமை இரவு கொழும்பை எட்டியது மிகப்பெரும் அதிர்ச்சி அலைகளை தோற்றிவித்துள்ளது.

1583ஆம் ஆண்டு காலப்பகுதியில் இலங்கையில் கிறிஸ்தவர்களின் தொகை 43 ஆயிரமாக அதிகரித்திருந்தது. 26 தேவாலயங்களும் உருவாகியிருந்தன. அவற்றில் ஒன்று மாந்தையில் அமைந்துள்ள மடுத்தோவலாயமாகும். இது மன்னாரில் இருந்து 6 மைல்கள் தொலைவில் அமைந்துள்ளது.

பலநூறு ஆண்டுகளாக வருடாந்தோறும் நடைபெறும் உற்சவத்தில் இலங்கையின் 4 திசைகளிலிருந்தும் மக்கள் சென்று கலந்து கொள்வதுண்டு,

கடந்த புதன்கிழமை மன்னார் பேராயர் இராஜப்பு ஜோசப்பின் உத்தரவிற்கு அமைய கன்னிமாத சிலை ஏ-32 வீதியில் உள்ள வெள்ளாங்குளம் புனித பிரான்சிஸ்தேவலாயத்திற்கு கொண்டுசெல்லப்பட்டுள்ளது. அதன் பின்னர் மன்னாாப் பகுதியில் நடைபெறும் படை நடவடிக்கையை வழி நடத்திவரும் இரா ணுவ அதிகாரி மேஜர் ஜெனரல் ஜெகத் ஜெயசூரியாவுக்கு இந்தத் தகவலை பேராயர் தொலைபேசியூடாக தெரிவித்திருந்தார்.

இதனிடையே கடந்த வாரம் படையினரின் கட்டுப்பாட்டில் உள்ள முருங்கன் பகுதி மீது விடுதலைப்புலிகளில் மோட்டார் தாக்குதலை நடத்தியுள்ளனர். 120 மில்லி மீற்றர் மோட்டார் எறிகணைகள் அந்தப்பகுதியில் வீழ்ந்து வெடித்துள்ளன.

இராணுவத்தளபதி லெப்டினல் ஜெனரல் சரத்பொன்சேகா வவுனியாப்பகுதிக்கு கடந்த வெள்ளிக்கிழமை பயணம் மேற்கொண்டு படை நடவடிக்கைகளை பார்வையிட்டிருந்தார். பருவமழை காரணமாக படை நடவடிக்கைகளில் ஏற்பட்டு வரும் தாமதங்கள் குறித்தும் அவர் கேட்டறிந்துள்ளார்.

திடீரென தோன்றிய தொற்று நோய்களால் பெருமளவிலான இராணுவத்தினர் பாதிக்கப்பட்டது தொடர்பாகவும் அவர் விசாரணைகளை மேற்கொண்டிருந்தார். மடுவில் இருந்து வடக்காக 4 கிலோமீற்றர் தொலைவில் உள்ள பாலம்பிட்டியை கைப்பற்றுவதன் மூலம் விடுதலைப்புலிகளின் விநியோக வழிகளை தடை செய்து மடுப்பகுதி மீதான படை நடவடிக்கையை இலகுவாக்குவதே படையினரின் உத்திகள்.

இதற்கு அமைய 57 ஆவது படையணியின் 2ஆவது பிரிக்கேற் முள்ளிக்குளத்தில் இருந்து பாலம்பிட்டியை நோக்கிய நகர்வை ஆரம்பித்திருந்தது. அது தற்போது பாலம்பிட்டியிலிருந்து 2 1/2 கிலோமீற்றர் தொலைவில் நிலைகொண்டுள்ளது.

57 ஆவது படையணியின் முதலாவது பிரிக்கேற் மடுவிலிருந்து 1 கிலோமீற்றர் தொலைவில் நிலைகொண்டுள்ளது. இந்தப் பகுதியில் கடந்த வாரம் நடைபெற்ற சமரில் இரு படையினர் கொல்லப்பட்டதாகவும் மேலும் 11 போர் படுகாயமடைந்துள்ளதாகவும் படைத் தரப்பு தெரிவித்துள்ளது.

இதனிடையே புனித கன்னிமாதா சொரூபம் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் கொண்டு செல்லப்பட்டது தொடர்பில் பல அரசியல் மற்றும் படைத்துறை வட்டாரங்கள் தமது அதிருப்திகளை வெளியிட்டுள்ளன என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(அ-5)

## மனித உரிமைகளின் அடிப்படையிலேயே இலங்கையுடனான வர்த்தக உறவுகள் அமையும்

### ஏற்றுமதியாளர்களிடம் அமெரிக்காவும், ஐரோப்பிய ஒன்றியமும் தெரிவிப்பு

(கொழும்பு)

மனித உரிமைகளின் நிலைமைகளில் ஏற்படும் முன்னேற்றங்களில் அடிப்படையிலேயே இலங்கையுடனான வர்த்தக உறவுகளில் அபிவிருத்தி அமையும் என அமெரிக்காவும் ஐரோப்பிய ஒன்றியமும் மீண்டும் வலியுறுத்தியுள்ளது..

இலங்கையின் ஏற்றுமதித் துறையில் பெரும் பங்கு வகிக்கும் ஆடை ஏற்றுமதியாளர்களிடமே இலங்கையின் ஏற்றுமதிப் பொருட்களின் முக்கிய சந்தையாக விளங்கும் அமெரிக்காவும் ஐரோப்பிய ஒன்றியமும் இதனைத் தெரிவித்துள்ளன.

இலங்கை ஆடை ஏற்றுமதியாளர்கள் கொழும்பில் உள்ள அமெரிக்கா ஐரேப்பிய ஒன்றியத்தூதுவர்களை சந்தித்தபோது இச்செய்தி விடுக்கப்பட்டுள்ளது.

இதன்போது கருத்துத்தெரிவித்த அமெரிக்க தூதுவர் றொபட் ஓ பிளேக் இலங்கையில் மனித உரிமைகளின் எதிர்மறையான போக்கு கவலையை ஏற்படுத்தியுள்ளது.

மனித உரிமைகளின் நிலைமைகளில் முன்னேற்றம்காண்பதற்கு ஒவ்வொருவரும் அரசாங்கத்திற்கு ஊக்கம் வழங்கவேண்டும்.

இலங்கையின் உற்பத்திப்பொருட்கள் மற்றும் தொழிலாளர்களின் வேலைத் தரத்தை அமெரிக்க மக்கள் பெரிதும் விரும்புகின்றனர்.

இங்கு மனித உரிமைகளின் நிலைமைகளின் முன்னேற்றம் காணப்படும் இடத்தில் இலங்கையின் வர்த்தகத்திற்கு அமெரிக்கா உதவி வழங்கும் என்றார்.

இதேவேளை, அங்கு கருத்துத்தெரிவித்துள்ள ஐரோப்பிய ஒன்றியத்தின் இலங்கைக்கான தூதுவர் ஜூலியன்விஸ்சன் இலங்கையின் ஏற்றுமதிப்பொருட்களை நாம் மிகவும் விரும்புகின்றோம்.

ஆனால்27 சர்வதேசசமவாயங்களை அமுல்படுத்துவதை அடிப்படையாகக் கொண்டே இலங்கை பொருட்களுக்கான இறக் குமதி தீர்வைச் சலுகை தீர்மானிக்கப்படும் என்றார்.

ஆடை உற்பத்திப்பொருட்கள் உள்ளிட்ட7 ஆயி ரத்து 200 இலங்கை ஏற்றுமதிப் பொருட்களுக்கு ஐரோப்பிய ஒன்றியம் இறக்குமதித் தீர்வைச்சலுகையை (GSP+) வழங்கி வருகிறது.

இந்தச்சலுகை காலம் செப்ரெம்பர் மாதம் முடிவடையவுள்ள நிலையில் ஐரோப்பிய ஒன்றியம் இந்த தீர்வைச்சலுகையை பெறுவதற்கான இலங்கையின் தகுதி குறித்து பரிசீலித்து வருகின்றது.

(அ-5)

## காசநோய் விழிப்புணர்வை ஏற்படுத்தும் வினாவிடை போட்டி

காசநோய் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில் சங்கானை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை வினா- விடைப் போட்டி ஒன்றை நடாத்த முன்வந்துள்ளது. இதற்கான வினாக்கள் கீழ்த் தரப்படுகின்றது. இக் கேள்விக் கொத்தினை பத்திரிகையில் இருந்து வெட்டி எடுத்து விடைகளை எழுதி இம்மாதம் 15 ஆம் திகதிக்கு முன்பு, சுகாதார வைத்திய அதிகாரி , சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை, சங்கானை என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும் என மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி தெரிவித்துள்ளார்.

சகல வினாக்களுக்கும் சரியான விடையளிப்பவர்களில் 10 அதிர்ஷ்டசாலிகள் தெரிவு செய்யப்பட்டு மானிப்பாய் வட்ட அரிமாக் கழக அனுசரணையுடன் பெறுமதிமிக்க பரிசில்கள் வழங்கப்படும். பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட வினாக்கொத்துக்கள் தவிர்ந்த ஏனையவை நிராகரிக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஓ)

*காசநோய் விழிப்புணர்வு செயற்திட்டம்*

1. உலக காசநோய் தினம் எப்போது அனுஷ்டிக்கப்படுகின்றது?
...............................................
2. இவ்வருடத்திற்கான காசநோய் தினத்தின் தொனிப் பொருள் யாது?
...............................................
3. காசநோயினை ஏற்படுத்தும் கிருமியின் பெயர் யாது?
...............................................
4. காசநோய் ஏற்படுத்தும் கிருமியினைக் கண்டுபிடித்தவர் யார்?
...............................................
5. DOTS இன் விரிவாக்கம் யாது?...............................
6. DOTS இன் நோக்கம் யாது? ...............................
7. சிகிச்சை பெறாத காசநோயாளி ஒருவர் ஆண்டொன்றிற்கு எத்தனை பேருக்கு நோய்த் தொற்றை ஏற்படுத்துவார்?...............................
8. காசநோய் இலகுவாக தொற்றக்கூடியவர்கள் யார்?...............................
9. காசநோய்க்கான முக்கிய அறிகுறிகள் 5 தருக?...............................
10. மனித உடலில் காசநோயினால் பாதிப்படையும் முக்கிய பாகங்கள் 3 தருக?
...............................................
11. காசநோய் ஏற்பட்டுள்ள ஒருவரை வைத்திய ரீதியில் எவ்வாறு உறுதிப்படுத்தலாம்?
...............................................
12. யாழ்.மாவட்ட மார்பு நோய் சிகிச்சை நிலையம் எங்குள்ளது?...............................
13. காசநோயை முற்றாக குணப்படுத்த முடியுமா?...............................
14. காசநோய்க்கு பூரண சிகிச்சை ஏன் அவசியம்?...............................
15. காசநோய் ஒரு பரம்பரை நோயா?...............................
16. காசநோய் பரவாதிருக்க நோயாளி கடைப்பிடிக்கவேண்டிய சுகாதார நடவடிக்கை 3த
...............................................
17. இந்நோய் ,நோயாளி தொடர்பாக எமது சமூகத்தில் காணப்படும் தவறான மனப்பாங்கு யாது? .
...............................................
18. குழந்தையில் காசநோய் பரவாதிருக்க வழங்கப்படும் தடுப்பூசி யாது?
...............................................
19. இது எப்போது வழங்கப்படும்?...............................
20. காசநோயை முற்றாக குணப்படுத்த செய்ய வேண்டியவை எவை?
21. காசநோயை பூரணமாக குணப்படுத்த எவ்வளவு காலம் சிகிச்சை பெறவேண்டும்?
...............................................
22. காசநோய்க்குரிய சிகிச்சையை இடைநிறுத்தினால்ஏற்படும் நோய் நிலை யாது?
...............................................
23. காசநோய்க்குரிய மருந்தை எங்கெங்கு பெறலாம்?...............................
24. காசநோயுடன் நெருங்கிய தொடர்புள்ள நோய் யாது?...............................
25. யாழ்.மாவட்டத்தில் 2008 ஜனவரி மாதம் காசநோயால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை யாது?...............................

பெயர்:-............................... விலாசம்:-...............................

## வெளிநாட்டுக் கப்பல்களுக்கு எரிபொருள் நிரப்பும் நடவடிக்கை இவ்வாண்டு ஆரம்பம்

(கொழும்பு)

வெளிநாட்டுக் கப்பல்களுக்கான எரிபொருள் நிரப்பும் நடவடிக்கையை இந்த வருடத்திற்குள் ஆரம்பிக்க தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது என இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

கொழும்பு, காலி, அம்பாந்தோட்டை துறைமுகங்களில் எரிபொருளை நிரப்ப நடவடிக்கை எடுக்கப்படும் என கூட்டுத் தாபனத்தின் வர்த்தக அபிவிருத்தி மற்றும் நிறுவன நடவடிக்கைகள் தொடர்பான பிரதிப்பொது முகாமையாளர் தெரிவித்தார்.

இதனைவிட அம்பாந்தோட்டை துறைமுகத்தை அண்மித்த கடற்பரப்பிலும் வெளிநாட்டுக் கப்பல்களுக்கான எரிபொருள் நிரப்பும் செயற்திட்டம் ஆரம்பிக்கப்படும் என அவர் குறிப்பிட்டார்.

(அ-7)

## இருதயத்தில் துளை உள்ளவர்களுக்கு சிகிச்சை கராப்பிட்டிய வைத்தியசாலையில் மேற்கொள்ளலாம்

(கொழும்பு)

அரசாங்கவைத்திய சாலைகளில் இருதய சத்திரசிகிச்சைகளுக்கான காத்திருப்போர் பட்டியலில் உள்ளவர்களுக்கான சத்திரசிகிச்சைகளை அடுத்தவருடத்துக்கள் நிறைவு செய்யப்பட முடியுமென சுகாதார அமைச்சு நம்பிக்கைவெளியிட்டுள்ளது. கொழும்புக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டுஇருந்த இருதய சத்திர சிகிச்சை கண்டி, காலி மற்றும் கராப்பிட்டிய போதனா வைத்திய சாலைகளுக்கும் விஸ்தரித்தமையே, காத்திருப்போர் பட்டியலை நிறைவு செய்வதற்கான காரணமாக அமைந்துள்ளதென அமைச்சர் நிமல் சிறிபால டி.சில்வா தெரிவித்துள்ளார்

கராப்பிட்டிய போதனா வைத்தியசாலையில் ஏற்கனவே காத்திருப்போர் பட்டியலில் உள்ளவர்களின் இருதய சத்திரசிகிச்சைகள் பூர்த்தியடைந்துள்ளனர்.

நீண்ட காத்திருப்போர் பட்டியலில் தங்கியிருக்காது இருதய சத்திர சிகிச்சைகளை மேற்கொள்ளக் கூடிய சந்தர்ப்பத்தை நோயாளர்களுக்கு ஏற்படுத்திக்கொடுத்ததாக கராப பிட்டிய போதனாவைத்தியசாலையின் இருதய சத்திர சிகிச்சை தொடர்பான விசேட நிபுனர் நாமகமகே தெரிவித்தார் .

அத்துடன் இருதயத்தில் துளைபோன்ற குறைபாடுகளுடன் நாட்டில் எந்தவோரு பகுதியிலும் இருக்கும் பிள்ளைகளுக்கு உடனடியாக சிகிச்சைகளை அளிக்க கராப்பிட்டிய வைத்திய சாலை தயாராக உள்ளதாகவும் குறிப்பிட்டார். (அ-7)

# குண்டாக இருப்பது ஆரோக்கியமானதல்ல



டாக்டர் ரவீந்திர குமரன்
பேரியாட்ரிக் அறுவை சிகிச்சை நிபுணர்

இன்றைய நவீன உலகில் ஆரோக்கியமாக வாழ்வது கூட ஒரு சாதனைப் பயணம் தான் என்கிறது ஒரு பிரித்தானிய மருத்துவ இதழ். இன்று நோய்களோடும் அதற்குரிய மருந்துகளோடும் வாழ்வதற்கு நாம் நம் மனதை தயார் செய்து கொண்டுவிட்டோம். இதற்கு மாற்றுவழி இருக்கிறது என்றாலும், யாரும் குறிப்பாக தெற்காசியர்கள் பின்பற்றுவது இல்லை என்பது உண்மைதான். இதனால் கடந்த பத்து வருடங்களில் உடற் பருமனால் பாதிக்கப்படுவோரின் சதவீதம் உயர்ந்து கொண்டே வருகிறது. இதே நிலை நீடித்தால் உடற் பருமனால் உயிரிழப்பு ஏற்படுவது அதிகமாகக் கூடும் என்று எச்சரிக்கையும் அந்த இதழ் தெரிவிக்கிறது.

அதனால் உடற்பருமன் குறித்தும் அதனால் ஏற்படும் பக்கவிளைவுகள் குறித்தும் இத் துறையில் நிபுணராக விளங்குபவரும், சென்னையில் செயற்பட்டு வரும் அட்மெர்ட் ஒபிசிடி சென்டரின் தலைமை மருத்துவருமான டாக்டர் குமரனின் கருத்துக்கள் இங்கே தரப்படுகின்றது.

**☛ உடற்பருமன் குறித்து நம் மக்களிடம் எம்மாதிரியாக விழிப்புணர்வு ஏற்பட வேண்டும்?**

பாமர மக்களும் நடுத்தர வர்க்க மக்களும் உடற்பருமன் என்றால் என்ன என்பதைக் குறித்து முதலில் அறிந்திருக்க வேண்டும். ஒருவரின் எடை எவ்வளவு இருக்க வேண்டும், எவ்வளவிருந்தால் கூடுதல் எடை என்றும், எவ்வளவு எடை இருந்தால் உடற்பருமன் என்று தெரிந்திருக்க வேண்டும். அதை விட ஆபத்தை விளைவிக்கக் கூடிய உடற்பருமன் எது என்பதையும் அறிந்திருக்க வேண்டும்.

நம் உயரத்தை நாம் நினைத்த படி மாற்ற முடியாது. அதனால் உயரத்திற்கு ஏற்றவாறு உடலின் எடை எவ்வளவு இருக்க வேண்டும் என்பதை உலக அளவில் ஒரே மாதிரியாக நிர்ணயித்திருக்கிறார்கள். இதற்கு BMI என்று பெயர். இதன் அடிப்படையில் ஒவ்வொருவரும் தங்களின் உயரத்துக் கேற்றவாறு இருக்க வேண்டிய எடை அளவு எவ்வளவு என்பதை அறியலாம். ஐந்து அடி உயரம் உள்ள ஒருவரின் இயல்பான எடை 55 கிலோ தான். அதே ஐந்து அடி உயரமானவரின் உடல் எடை 100 கிலோவாக இருந்தால் அவர் BMIயின் கணக்குப்படி ஆபத்தை விளைவிக்கும் உடற்பருமனுடன் இருக்கிறார் என்று பொருள். தெற்காசியர்களை பொறுத்தவரை பெரும்பான்மையோர் கூடுதல் எடையுடன் தான் காணப்படுகின்றனர். அதற்கு நாம் கடைப்பிடிக்கும் உணவுப்பழக்கம், பின்பற்றாத உடற்பயிற்சியுமே காரணம். இதை முதலில் புரிந்து கொள்ள வேண்டும். அதை விட ஒருவரின் உடல் எடை இயல்பாக இருந்தால் போதாது அதை அதே நிலையில் பராமரிக்க வேண்டும்.




கூடுதல் எடை கொண்டவர்கள் உணவுக் கட்டுப்பாடு மற்றும் பயிற்சிகள் மூலம் உடல் எடையை குறைத்து அதனை பராமரிக்கலாம்.

குண்டாக இருப்பது ஆரோக்கியமானதல்ல. உடற்பருமனோடு இருப்பதால் நமக்கு பல நோய்கள் அழையாத விருந்தாளியாக நம் உடலில் குடியேறும்.

நாம் அனைவரும் ஒருநாள் நிச்சயமாக மரணம் அடைய நேரிடும் என்றாலும் 73 வயது வரை ஆரோக்கியமாக வாழ்ந்து விட்டு 74 வயதில் மரணம் அடைவதற்கும் அவரே 39 வயதிலேயே மூட்டுவலி வந்து மாரடைப்பு ஏற்பட்டு இறப்பதற்கும் வேறுபாடு உண்டு. வாழ்க்கைத் தரத்திலும் இலக்கை அடைவதிலும் உடற் பருமன் உடையவர்கள் தாங்கள் நிர்ணயித்த இலக்கைத் தொட முடிவதில்லை. அதுமட்டுமல்லாமல் உடற்பருமன் கொண்டவர்கள் சாதாரண எடை உள்ளவர்களைக் காட்டிலும் 200 சதம் இறப்பை நோக்கி விரைவாக பயணிக்கின்றனர்.

உலக அளவில் புகைப் பிடிப்பதன் மூலம் ஏற்படும் உயிரிழப்பிற்கு அடுத்த படியாக அதிகம் உயிரிழப்பு ஏற்படுவது இந்த உடற்பருமன் பிரச்சினையால் தான்.விரைவில்இது முதல் இடத்திற்கு வந்து விடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. காரணம் புகைப்பிடிப்பது பற்றிய விழிப்புணர்வு அதிக அளவில் நடைபெற்று பலனைத் தரத் தொடங்கியுள்ளது.

உடற்பருமன் ஏற்படுவதில் பரம்பரை மரபணுதான் காரணம் என்பது மிகக் குறைந்த அளவிற்குத் தான் இருக்கும் என்று ஒப்புக் கொள்ளமுடியும். ஏனெனில் நாம் குண்டாவது மரபணுவின் தவறால் அல்ல. அப்படி எனில் அறுவைச் சிகிச்சை செய்த பிறகும் குண்டாக வேண்டுமே,அது நடைபெறாததால் உடற்பருமனுக்கு ஜீன்களின் பங்கு மிகக் குறைவுதான் என்று சொல்லலாம்.

**☛ உடற்பரு மனில் எந்த நிலையின் போது பேரியாட்ரிக் அறுவைச் சிகிச்சை அவசியமாகிறது?**

உலகத்திலேயே உடற்பருமனால் பாதிக்கப்பட்டவர்கள் அதிகமானோர் இருப்பது அமெரிக்காவில்தான். நம் தெற்காசியாவில் இந்த எண்ணிக்கை விரைவில் 4 கோடியைத் தாண்டும் என்கிறது ஒரு மருத்துவ ஆய்வு .அதனால் அமெரிக்கர்கள் வகுத்துள்ள அட்டவணைப் படி பார்த்தால் இந்த BMI அளவு யாருக்கு 40 மேல் இருக்கிறதோ அவர்களுக்குத் தான் இந்த அறுவைச்சிகிச்சை அவசியமாகிறது. இவர்களில் இரத்தம் அழுத்தம், நீரிழிவு, மூட்டு வலி உள்ளிட்ட பல பக்க விளைவுகளுடன் இருப்பவர்களுக்கும் இந்த BMI யின் கணக்குப்படி 35க்கு மேல் 40க்குள் இருந்தால் அவர்களுக்கும் இந்த அறுவைச் சிகிச்சை அவசியமாகிறது.

**☛ உடற்பருமனுக்கும், நீரிழிவுக்கும் என்னதொடர்பு?**

இரண்டு வகைப்பட்ட நீரிழிவுநோயில் டைப் 1க்கும் உடற்பருமனுக்கு தொடர்பில்லை. ஆனால் டைப் 2க்கும் உடற்பருமனுக்கும் தொடர்பு உண்டு. உடலின் எடை அதிகரிக்க அதிகரிக்க சுரக்க வேண்டிய இன்சுலினின் அளவு அதிகமாக இருந்தாலும் அதன் செயற்பாடுதிருப்திகரமாக இருக்காது.

**☛ இந்த சிகிச்சை செய்து கொண்ட பின் நீரிழிவு நோய் குணமாக வாய்ப்புள்ளதா?**

கண்டிப்பாக குணமாகும். சர்க்கரை வியாதி வந்து 10வருடங்களுக்குள் இருந்தால் 100 சதம் வரை உத்தரவாதம் தரமுடியும். 20 வருட காலமாக நீரிழிவு நோய் இருந்து ப்ரோ இன்சுலினின் அளவு குறைந்தால் மட்டுமே இவை சாத்தியமாகாது என்று கூறலாம்.

ஆனால் இந்த அறுவைச் சிகிச்சை செய்து கொண்டபின் நீரிழிவுநோய் வராது என்று உறுதி செய்துகொள்ளலாம். இந்த அறுவைச் சிகிச்சையின் போது ஏற்படும் ஓமோன் மாறுபாடுகளால் தான் இவை சாத்தியமாகின்றன. அதேபோல் பேரியாட்ரிக் அறுவைச்சிகிச்சையில் பாண்ட் போடுவது, பைப்பாஸ் அறுவைச் சிகிச்சை செய்வது எனப் பலவகைகள் உண்டு. பாண்ட் போடுவதில் நீரிழிவு நோய் 100சதம் குணமாகும் என்று உத்தரவாதம் தர இயலாது.

**☛ பேரியாட்ரிக் அறுவைச்சிகிச்சை செய்த பின் உடலில் இருக்கும் கூடுதல் எடையைக் குறைக்க லைபோஸக்ஷனை நாடலாமா?**

நோயாளி புத்திசாலியாக இருந்தால் பேரியாட்ரிக் அறுவைச்சிகிச்சைக்கு பின் உணவு கட்டுப்பாடு, பழக்கவழக்கம், உடற்பயிற்சி ஆகியவற்றை தொடர்ந்து மேற்கொண்டால் இயல்பான உடல் எடைக்குக் கூடத் திரும்பலாம். ஆனால் லைபோஸக்ஷனை செய்து கொள்ளவது அவரவர் விருப்பத்தினை பொறுத்தது. மருத்துவர்களின் ஆலோசனையையும் கருத்தில் கொள்வது நலம்.

**☛ உடல்எடை கூடிவருபவர்களுக்கு பக்க விளைவாக எந்த நோய்கள் வரக் கூடும்?**

முதலில் அவர்களுக்கு உளவியல் சார்ந்த நோய்கள் வரும்.தங்களை தனிமைப் படுத்திக் கொள்வார்கள். மற்றவர்களுடன் இயல்பாக பழகமாட்டார்கள். பயணங்களையோ, வெளியிடங்களுக்கு செல்வதையோ விரும்பமாட்டார்கள். தன்னை மற்றவர்கள் கிண்டல் செய்யக்கூடும் என்று அஞ்சியே தினம் தினம் வேதனைப்படுவார்கள். அவர்களுக்கு இந்த அறுவைச்சிகிச்சை மூலம் முதலில் தன்னம்பிக்கை வரும்.

இந்த நோயின் அறிகுறியாக முதலில் உறங்கும்போது உரத்த ஒலியில் குறட்டை எழுப்புவார்கள். தூங்கும் போது குறட்டை எழுப்புபவர்களில் 77சதவீதத்தினர் இதனால் பாதிக்கப்படுகிறார்கள். மேலும் இதனுடன் சர்க்கரை வியாதி, இரத்தஅழுத்தம், கொலஸ்ட்ரால், மூட்டுவலி, புற்றுநோய், மலட்டுத்தன்மை ஆகியவை பக்கவிளைவாக ஏற்படும்.

**☛ உடற்பருமனை தவிர்ப்பதற்கான உணவுமுறைகள் என்ன?**

பீட்சா, பர்க்கர் சாப்பிட்டால் உடல் பருமன் வந்துவிடும் என்பது பொய். நம் ஹோட்டல்களில் கிடைக்கும் நெய்த் தோசை சாப்பிட்டால் கூட உடல் எடை கூடும். உணவு உட்கொள்ளும்போது அறிவு நிலையிலிருந்து சாப்பிடவேண்டும்.

சுவைக்கோ, உணவுக்கோ அடிமை யாகாமல் உட்கொள்ளவேண்டும். அளவுடன் உண்டு, மீதமானதை ஒதுக்கித் தள்ளும் மனோபாவத்தை வளர்த்துக்கொள்ள வேண்டும். உடற்பயிற்சியை தவறாமல் செய்ய வேண்டும்.

# பாலூட்டும் தாய்மார்களின் கவனத்திற்கு

குழந்தையின் அங்க அசைவுகள் ஒவ்வொன்றையும் அவதானித்து பூரிப்படையும் தாய்மார்களின் அன்பும் அரவணைப்பும் வழிகாட்டலும் குழந்தைகளின் வாழ்வை வளம்படுத்துகின்றன. எனினும் அவர்களில் சிலரில் குடிகொண்டிருக்கும் மூடப் பழக்க வழக்கங்களும் அறிவியல் அறிவின்மையும் குழந்தைகளின் வளர்ச்சியையும் சுகநலத்தையும் சின்னாபின்னமாகச் சிதறடித்து விடுகின்றன. வளமான வாழ்விற்கு அத்தியாவசியமானது உணவாகும். குழந்தையின் வளர்ச்சிக்கும் சுகநலத்திற்கும் நன்மை பயப்பன பல, எனினும் எல்லோராலும் ஏற்றிப் போற்றப்படுவது தாய்ப் பாலே.மனித இனம் தோன்றியது முதல் இன்று வரை நின்று நிலைத்து நிற்கிறது. தாய் தொற்றுக்குள்ளாக்கிய வேளைகளிலோ அல்லது நோய் வாய்ப்பட்ட வேளையிலோ வேறு ஒரு தாய் பாதிப்பிற்குள்ளான குழந்தைக்கு பாலூட்டும் (முலைப் பால் ) பழக்கம் அன்று வழக்கத்திலிருந்தாலும் இன்று மெல்ல மெல்ல அந்த வழக்கம் அருகி வருகிறது. இதனாலேயே புட்டிப்பாலூட்டும் வழக்கம் எம்மிடையேயும் வழக்கமாகிவிட்டது.

பசும்பாலை முறைப்படி சூடேற்றி கிருமி நீக்கம் செய்தும் சுத்தம் செய்தும் பதப்படுத்தியதன் பின்பும் அதனை மேலும் சத்துமிக்கதாக்க வேறு வளம் மிக்க பொருட்களையும் உள்ளடக்குகின்றனர்.

எனினும் தாய்ப்பாலுக்கு ஈடிணையான ஒன்றாக புட்டிப்பாலை உருவாக்க இயலாதுள்ளனர் உற்பத்தியாளர்கள். இதனாலேயே மருத்துவர்களும் தாய்ப்பாலூட்டலை ஏற்றிப் போற்றுகின்றனர்.

தாய்ப்பால் ஊட்டச்சத்து மிக்கது. தொற்றுக்கள் தொற்றுவதை தடுத்து நிறுத்தவல்லது. நோய்கள் பற்றாதிருக்க பாதுகாப்பு வழங்குகின்றது. குழந்தையின் வயிற்றில் இலகுவில் செரிக்கக்கூடியது. இவற்றிற்கெல்லாம் மேலாக ஒவ்வாமையை விளைவிக்காது. முதல் ஆறு மாதங்களுக்கு தேவையான சத்துக்கள் அனைத்தையும் தன்னகத்தே கொண்டுள்ளது. இக் காலப் பகுதியில் வேறுவகையான உணவுப் பதார்த்தங்கள் அத்தியாவசியமானவை அல்ல. இவ் வேளையில் உட்கொள்ளும் தாய்பாலின் பலா பலன்களை குழந்தை தனது முதல் இரண்டு வருடங்களில் மட்டுமல்ல தனது பிற்கால வாழ்க்கையிலும் ஆண்டு அனுபவிக்கின்றது.



தாய்ப்பாலூட்டல் தனித்தனியே உடல் சார்ந்த ஒன்றல்ல. உள்ளத்துணர்வுடனும் உணர்ச்சியுடனும் பின்னிப்பிணைந்தது. அன்பின் வளர்ச்சிக்கு அடித்தளமாக அமைவது. தாயிற்கும் சேயிற்குமான தொடுகை உணர்வு. அன்னையின் அரவணைப்பில் தாய்ப்பால் அருந்தும் சிசு ஏனைய சிசுக்களை விட மிக விரைவில் வளர்ச்சியும் தேர்ச்சியும் அடைகிறது.நலமாக வாழ்கிறது.

சில தாய்மார்கள் தாய்ப்பாலூட்டுவதால் தமது மார்பழகு கெட்டுவிடும் என எண்ணுகின்

தாய்ப்பால் முதல் முறை ஊட்டமுன் 'கடுப்புப் பால்' என எண்ணி 'சீம்பால்' எனப்படுவதை தீது என எண்ணி பீச்சி வெளியேற்றிவிட்டு தொடர்கின்றனர். அறியாமையால் நடக்கும் இவ் இரண்டு செயல்களும் சிசுக்களுக்கு துன்பத்தை விளைவிக்கவல்லவை.

முலையிலிருந்து முதன் முதலாக பால் வெளி வர முன் முலை சுரக்கும் புரதம் அதிகளவிலான தடித்த கடுப்புப் பால் என அழைக்கப்படும். சிசுவின் முதலாவது நாள் போஷாக்கிற்கு மிக உன்னதமானது.அழகு கெட்டுவிடும் என்று எண்ணுபவர்களில்சிலர்பசும்பாலையோ அல்லது புட்டிப்பாலையோ வழங்குகின்றனர்.

தாய்ப்பால் சக்தி மிக்கதாகிலும் தாயானவள் தொற்றுக்குள்ளானவேளையிலும் நோய் வாய்ப்பட்ட வேளையிலும் சிசுவிற்கு தாய்ப்பாலூட்டலைத் தவிர்க்கவேண்டும்.

காசநோய் தொற்று எச்.ஐ.வி.தொற்று ஆகியவற்றினால் பாதிப்புற்ற தாய்மார்கள் தங்கள் சிசுக்களுக்கு தாய்பாலூட்டலைத் தவிர்த்தல் வேண்டும் என மருத்துவர்கள் அறிவுறுத்துகின்றனர். எனினும் வளர்முக நாடுகளைச் சேர்ந்த வறிய தாய்மார்களில் பலர் தமது சிசுக்களுக்கு புட்டிப்பாலையோ அல்லது பசுப்பாலையோ வழங்க வசதியற்றவர்களாக உள்ளவேளைகளிலும் புட்டிப்பாலை உரிய முறையிலே தயாரித்து வழங்க வசதியும் வாய்ப்பும் அற்ற வேளைகளிலும் தாய்ப்பாலை ஊட்டலாம் என அறிவிக்கின்றனர்.தாய்ப்பால்

சளிக்காய்ச்சல் (Pneumonia)
மார்புச் சளி நோய் (Bronchitis)
வயிற்றோட்டம் (Diarrhea)

காதின் நடுப்பகுதியில் ஏற்படும் ஒருவகைத் தொற்று.

சிறுநீர் கால்வாய்த் தொற்று என்பவற்றை தாய்ப்பால் தடுத்து நிறுத்தி விடுகிறது.அல்லது கட்டுப்படுத்துகிறது. பாலூட்டும் தாய்மார்கள் உண்ணும் உணவில் காணப்படும் நறுமணங்களும் அருஞ் சுவைகளும் தாய்ப்பாலினூடாக சிசுவைச் சென்றடைகின்றன. இவை சிசுவின் புலனுணர்வினைக் கட்டி எழுப்பதில் பெரும் பங்காற்றுகின்றன.

எனவே கர்ப்பிணித்தாய்மார்களும் பாலூட்டும் தாய்மார்களும் உண்ணும் உணவுகளிலும் அதிக அக்கறை காட்டல் அத்தியாவசியமாகிறது.

பாலூட்டும் தாய் சிசுவிற்கு எவ்வேளைகளிலும் எவற்றை, எவ்வாறு,எவ்வளவு காலத்திற்கு ஊட்டலாம் என்பதில் அரசும், சமூகம், தன்னார்வத் தொண்டு நிறுவனங்களும் அதிக அக்கறை காட்டவேண்டும். காட்டத் தவறின் நாளைய சமூகம் நலிந்துவிடும்.

# சர்வான், சந்தர்போல் சிறப்பான இணைப்பாட்டம் மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கு அபார வெற்றி

## தொடர் சமநிலையானது

(போட் ஒப் ஸ்பெயின்)

சந்தர்போல் மற்றும் சர்வானின் சிறப்பான இணைப்பாட்டத்தினால் இரண்டாவது டெஸ்டில் மேற்கிந்தியத் தீவுகள் அணி 6 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றது.

இதன் மூலம் இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் இரு அணிகளும் தலா ஒரு போட்டியில் வெற்றி பெற்றதால் தொடர் சமநிலையானது.

மேற்கிந்தியத் தீவுகளுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இலங்கை அணி இரண்டு டெஸ்ட் மற்றும் மூன்று ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடுகின்றது.

இதில் முதலாவது டெஸ்டில் இலங்கை அணி வெற்றி பெற்று தொடரில் 1:0 என்ற கணக்கில் முன்னிலை வகிக்க தொடரின் தீர்க்கமான இரண்டாவதும் இறுதியுமான டெஸ்ட் கடந்த 3ஆம் திகதி போட் ஒப் ஸ்பெயினில் ஆரம்பமானது.

இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற மேற்கிந்தியத் தீவுகள் அணியின் தலைவர் கிறிஸ் ஹைறல் களத்தடுப்பை தேர்ந்தெடுத்தார்.

இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி அதன் முதலாவது இன்னிங்ஸில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 278 ஓட்டங்களை எடுத்தது.

இதில் சாமரசில்வா 76 ஓட்டங்களையும் டில்சான் 62 ஓட்டங்களையும் வர்ணபுர 35 மற்றும் வான்டொட் 30 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் எட்வேட்ஸ் 4 விக்கெட்டுக்களையும் பவல், ரெய்லர் ஆகியோர் தலா 2



விக்கெட்டுக்களையும் பிராவோ ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினார்.

பதிலுக்கு தனது முதலாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத் தீவுகள் அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 294 ஓட்டங்களை எடுத்தது.

இதில் சர்வான் 57 ஓட்டங்களையும் சிமித் 47, சற்றக்கோன் 46 மற்றும் ஹைறல் 45 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் முரளிதரன் 5 விக்கெட்டுக்களையும் வாஸ், துஷார தலா 2 விக்கெட்டுக்களையும் மற்றும் அமரசிங்க ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

தொடர்ந்து முதலாவது இன்னிங்ஸில் 16 ஓட்டங்கள் பின்னிலையிலிருந்த இலங்கை அணி தனது இரண்டாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடி 268 ஓட்டங்களை பெற்று சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

இதன் மூலம் மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கு வெற்றி இலக்காக 253 ஓட்டங்கள் நிர்ணயிக்கப்பட்டது.

துடுப்பாட்டத்தில் சமரவீர 125 ஓட்டங்களையும் சமிந்தவாஸ் 45 ஓட்டங்களையும் மற்றும் டில்சான் 25 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் ரெய்லர் 4 விக்கெட்டுக்களையும் பவல் ,எட்வேட்ஸ், பிராவோ மற்றும் ஹைறல் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

போட்டியின் நான்காம் நாளான நேற்று முன்தினம் தனது இரண்டாவது இன்னிங்ஸில் 253 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத் தீவுகள் அணி ராம் நரேஷ் சர்வானின் சிறப்பான சதத்தின் மூலம் 4 விக்கெட்டுக்களை மாத்திரம் இழந்து 254 ஓட்டங்களை எடுத்து



6 விக்கெட்டுக்களால் இலகுவாக வெற்றி பெற்றது.

ஒரு கட்டத்தில் 73 ஓட்டங்களை எடுத்து 3 விக்கெட்டுக்களை இழந்து தடுமாறிய மேற்கிந்தியத்தீவுகள் அணியை சர்வான், சந்தர்போல் இணைந்து 4-வது விக்கெட்டுக்காக 153 ஓட்டங்களைப் பகிர்ந்து வெற்றிக்கு வழி வகுத்தனர்.,

இதில் ராம் நரேஷ் சர்வான் 102 ஓட்டங்களையும் சிவநாராயண் சந்தர்போல் ஆட்டமிழக்காமல் 86 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் வாஸ் 2 விக்கெட்டுக்களையும் மற்றும் துஷார, முரளிதரன் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

இவ் வெற்றியின் மூலம் மேற்கிந்தியத் தீவுகள் அணி சொந்த மண்ணில் தொடரை இழக்காமல் சமநிலை செய்து கெளரவம் பெற்றது.

இப்போட்டியின் நாயகனாகவும் தொடரின் நாயகனாகவும் மேற்கிந்தியத்தீவுகள் அணியின் நம்பிக்கை நட்சத்திரம் ராம் நரேஷ் சர்வான் தெரிவானார்.

இதனைத் தொடர்ந்து இரு அணிகளும் மோதும் மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் தொர்டரின் முதலாவது போட்டி நாளை மறுதினம் 10 ஆம் திகதி போட் ஒப் ஸ்பெயினில் ஆரம்பமாகின்றது. (5)

# இந்திய வீரர்கள் காயத்தால் அவதி

(கான்பூர்)

இந்திய அணியின் தலைவர் கும்ளே உள்ளிட்ட முன்னணி வீரர்கள் காயத்தால் அவதிப்பட்டு வருகின்றனர். இதனால் இந்திய அணிக்கு பின்னடைவு ஏற்பட்டுள்ளது.

தென்னாபிரிக்கா மற்றும் இந்திய அணிகளிற்கிடையிலான டெஸ்ட் தொடர் நடைபெற்று வருகிறது. முதல் டெஸ்ட் சமநிலையில் முடிபடைந்த நிலையில் 2வது டெஸ்டில் இந்தியா படுதோல்வி அடைந்தது. 3வது டெஸ்ட் எதிர்வரும் 11ஆம் திகதி கான்பூரில் ஆரம்பமாகிறது.

இந்தடெஸ்ட் போட்டியில் வெற்றி பெற்றால் மட்டுமே இந்தியா தொடரை சமன் செய்ய முடியும். இல்லையென்றால் தொடரை தென்னாபிரிக்காவிடம் இழக்கும். இந்நிலையில் இந்திய அணியின் தலைவர் கும்ளே உள்ளிட்ட முன்னணி வீரர்கள் காயத்தால் அவதிப்பட்டு வருகின்றனர்.

அணித்தலைவர் கும்ளே வயிற்றுபிடிப்பால் அவதிப்பட்டு வருகிறார். எனவே அவர் முழு உடல் தகுதிபெறுவதைப் பொறுத்து கான்பூர் டெஸ்ட் போட்டியில் பங்கேற்க முடியும்.

இதனால் கூடுதல் சுழற்பந்து வீச்சாளராக ரமேஸ்பவார் அணியில் சேர்க்கப்பட்டுள்ளார்.

அணியில் சேர்க்கப்பட்டுள்ள இஷாந் சர்மாவும் உடல் தகுதியை நிரூபித்த பின்னரே கான்பூர் டெஸ்ட் போட்டியில் விளையாட முடியும்.

இந்திய அணியின் விக்கெட் காப்பாளர் தோனியும் கைவிரல் காயம் மற்றும் முதுகு வலியால் அவதிப்பட்டு வருகிறார். சுழற்பந்து வீச்சாளர் ஹர்பஜன் சிங் இடுப்புபிடிப்பால் பாதிக்கப்பட்டுள்ளார். இதனால் இந்திய அணிக்கு பின்னடைவு ஏற்பட்டுள்ளது.

ஏற்கனவே சச்சின் டெண்டுல்கர் காயம் காரணமாக அணியில் இடம்பெற முடியாத சூழ்நிலை உள்ளது. தென்னாபிரிக்காவுக்கு இந்தியா பதிலடி கொடுக்க விரும்பும் நிலையில் வீரர்கள் காயத்தால் அவதிப்படுவது இந்திய அணியின் வெற்றி வாய்ப்பை பாதிக்கலாம் என்று கூறப்படுகிறது. (5)

# செரீனா சம்பியன்

(மியாமி)

மியாமி ஓபன் டென்னில் தொடரில் அமெரிக்காவின் செரீனா வில்லியம்ஸ் சம்பியன் பட்டம் வென்றார். அமெரிக்காவில் உள்ள புளோரிடாவில் மியாமி ஓபன் டென்னிஸ் தொடர் நடக்கிறது.

இத் தொடரில் உலகின் முன்னணி வீரர் வீராங்கனைகள் ப்ங்கேற்கின்றனர். நேற்று முன்தினம் நடந்த பெண்கள் ஒற்றையர் இறுதிபோட்டியில் அமெரிக்காவின் செரீனா வில்லியம்ஸ் செர்பியாவின் ஜெலீனாஜோன் கோவிச் மோதினர்.

இதில் அபார ஆட்டத்தை வெளிப்படுத்திய செரீனா முதல் செற்றை 6:1 என்ற கணக்கில் கைப்பற்றினார். பரபரப்பான இரண்டாவது செற்றை ஜோன்கோவிச் 5:7 என்ற கணக்கில் தன்வசப்படுத்தினார்.

வெற்றியை நிர்ணயிக்கும் மூன்றாவது செற்றில் அபாரமாக விளையாடிய செரீனா 6:3 என்ற கணக்கில் கைப்பற்றி 6:1, 5:7,6:3 என்ற கணக்கில் ஜோன்கோவிச்சை வீழ்த்தி கோப்பையை கைப்பற்றினார். (5)

# சூதாட்ட புகார் கூறிய அக்தருக்கு எதிராக வழக்கு

## முன்னாள் அணித்தலைவர் எச்சரிக்கை

(கராச்சி)

கிரிக்கெற் சூதாட்ட புகார் கூறிய அக்தருக்கு எதிராக வழக்கு தொடுக்கப்போவதாக முன்னாள் பாகிஸ்தான் அணியின் தலைவர்



களான இன்சமாம், மொயின்கான் ஆகியோர் எச்சரித்துள்ளனர். பாகிஸ்தான் அணியின் சர்ச்சைக்குரிய பந்து வீச்சாளர் அக்தர் இந்த ஆண்டு ஜனவரியில் அறிவிக்கப்பட்ட வீரர்களுக்கான ஒப்பந்த பட்டியலில் இருந்து நீக்கப்பட்டார். இதனால் ஆத்திரமடைந்த இவர், கிரிக்கெட் சபை நிர்வாகிகளை கடுமையாக விமர்சித்தார்.

இதையடுத்து ஒழுங்கு நடவடிக்கை குழு இவருக்கு 5 ஆண்டுகள் தடை விதித்தது. இந்த தடையை எதிர்த்து அக்தர் சார்பில் மேல் முறையீடு செய்யப்பட்டுள்ளது.

இதற்கிடையே, இந்தியா மற்றும் ஜோகன்னஸ்பேர்க்கில் விளையாடிய போது சூதாட்டக்காரர்கள் தன்னை தொடர்பு கொண்டதாக அக்தர் தெரிவித்தார். பின்னர் டிவி நிகழ்ச்சி ஒன்றில் இவர் அளித்த பேட்டி பெரும் பிரச்சினையை கிளப்பியுள்ளது.

இதில் முன்னாள் அணித்தலைவர்களான இன்சமாம் மற்றும் மொயின்கான் சில போட்டிகளில் மோசமாக விளையாட எனக்கு பணம் தர முன்வந்தனர் என புதிய குண்டை தூக்கி போட்டுள்ளார். இதை இன்சமாம் மறுத்துள்ளார்.

இது குறித்து அவர் அளித்த பேட்டி, விரைவில் அக்தர் மீது நானும், மொயின் கானும் வழக்கு தொடரவிருக்கிறோம். அவர் சூதாட்ட விவகாரத்தில் தேவையில்லாமல் எங்களையும் இழுத்துவிட பார்க்கிறார்.

இவ் விவகாரத்தில் பாகிஸ்தான் கிரிக்கெட் சபை (பி.சி.பி) மற்றும் சர்வதேச கிரிக்கெட் சபை (ஐ.சி.சி) என்ன செய்யப் போகிறது என்பதைப் பொறுத்து முடிபு செய்ய இருக்கிறோம். அக்தரை பற்றி சொல்லுவதற்று ஒன்றும் இல்லை. அவரது கிரிக்கெற் வாழ்க்கை முழுவதும் சர்ச்சைகள் நிறைந்ததாக உள்ளன.

அவருடன் விளையாடியவர்களுக்கு அவரைப்பற்றி நன்றாகத் தெரியும். அவர் வரிசையாக பிரச்சினைகளில் சிக்கி வருகிறார்.

அவர் தொடர்ந்து மோசமாக நடந்து கொண்டதை அடுத்துதான் அவருக்கு தண்டனை விதிக்கப்பட்டது. ஐந்து ஆண்டுகள் தடை என்பது கொடுமையானதுதான். ஆனால் அக்தர் தனது செய்கைகளால் அதை நியாயப்படுத்தி வருகிறார்.

இம்ரான் கான், ஜாவித்மியாண்தத் ஆகியோர் அக்தருடன் விளையாடியதில்லை. இவர்களது அணியிலும் அக்தர் இடம் பெறவில்லை. அதனால் அவர்களுக்கு அக்தரைப்பற்றி சரியாக தெரியவில்லை. அவரைப் பற்றி தெரிந்தவர்கள் யாரும் அவருக்கு ஆதரவு தரமாட்டார்கள்.

பாகிஸ்தான் கிரிக்கெட் சபை அவர் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுத்ததில் தவறில்லை. அவரது வார்த்தைகள் ஒவ்வொன்றும் அவருக்கு சிக்கலை ஏற்படுத்தும் என்பதில் சந்தேகமில்லை. இவ்வாறு இம்சமாம் தெரிவித்துள்ளார். (5)

பாம்பு வீட்டுக்குள் இருக்கும்போது அதைப் பற்றி அதிகம் சர்ச்சை செய்யத்தேவையில்லை.
—எகிப்து

வலம்புரி

## சமாதானத்தை வலியுறுத்தும் அமைச்சர் ஜெயராஜ் படுகொலை

அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் கொல்லப்பட்டுள்ளார் என்ற செய்தி இலங்கை அரசியலில் பெரும் பரபரப்பையும், பாதுகாப்பு தரப்பில் பேரதிர்ச்சியையும் ஏற்படுத்தியுள்ளது.

அமைச்சர் ஜெயராஜின் படுகொலையுடன் 2008ஆம் ஆண்டு ஏப்ரல் ஏழாம் திகதிவரையில் இரண்டு அமைச்சர்கள் உட்பட நான்கு நாடாளுமன்றஉறுப்பினர்கள்கொலைசெய்யப்பட்டுள்ளனர்.

நாடாளுமன்ற உறுப்பினர்கள் தியாகராஜா மகேஸ்வரன், கிட்டிணர் சிவநேசன், அமைச்சர் டி.எம். தசநாயக்கவுடன் இப்போது அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளேயும் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

இலங்கை நாடாளுமன்ற உறுப்பினர் மகேஸ்வரன் 2008 புத்தாண்டில் கொழும்பு ஸ்ரீ பொன்னம்பலவாணேஸ்வரர் ஆலயத்தில் வைத்து சுட்டுக் கொல்லப்பட்டார்.

நான்கு மாதங்களில், மாதத்திற்கு ஒருவர் என்ற சராசரிக் கணக்கெடுப்பில் நான்கு நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலியாகிப் போயிருக்கும் நிலையில்,

இலங்கை சமாதானத்தை நோக்கி முன்னேறுகின்றது என யாரேனும் கூறுவார்களாயின் அது மிகப் பெரும் மடமைத்தனமாகும்.

நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கே பாதுகாப்பு இல்லையென்றால் பொது மக்களின் நிலை என்ன என்பது குறித்து சற்றுச் சிந்தித்தாக வேண்டும்.

அமைச்சர்களும், நாடாளுமன்ற உறுப்பினர்களும் கொல்லப்பட்டால் மட்டும் அதனைக் கண்டிக்கும் அரசியல் கலாசாரமும், சர்வதேச நடைமுறையும் இல்லாதொழிந்து பொது மக்கள் கொல்லப்படும்போது ஒட்டுமொத்தமாக அதனைக் கண்டிக்கவும் -தடுத்து நிறுத்தவும் சகல தரப்பினரும் முன்வரவேண்டும்.

அமைச்சர் ஜெயராஜின் மரணத்தின் மீதான கண்டனங்கள் நியாயமானவை என்பதை ஏற்றுக்கொள்ளும் அதேநேரம், வன்னிப் பகுதியில் விமானக் குண்டுத் தாக்குதல் மூலம் கொல்லப்பட்ட அப்பாவிப் பொது மக்களின் படுகொலை தொடர்பிலும் கண்டனங்கள் அரசியல் பேதமின்றி தெரிவிக்கப்படுமாயின் அதனை ஜனநாயகப் பண்பாக, மனித நேயமாக கருதமுடியும்.

இதை விடுத்து அமைச்சர் ஒருவர் பலியாகி விட்டால் மட்டும் கொதித்தெழுவது பொது மக்கள் மத்தியில் வெறுப்பையும் விரக்தியையுமே ஏற்படுத்தும். அதேநேரம் அரசு சமாதான வழியைபின்பற்றி இனப்பிரச்சினைக்கு தீர்வைக் காண வேண்டுமென்பதையும் யுத்தத்தின் மூலம் மனிதப் பேரவலத்தை நிறுத்தி விடமுடியாதென்பதையுமே நாட்டில் இடம்பெறும் படுகொலைச் சம்பவங்களும் குண்டுவெடிப்புக்களும் நிரூபிக்கின்றன.

இதனை அரசு புரிந்து கொள்ளத்தவறும் ஒவ்வொரு கணப்பொழுதும் நாட்டில் எதுவும் நடக்கலாம் என்ற நிலை தொடரும்.

இலங்கை இனப்பிரச்சின்ன தொடர்பில் நியாயத்திற்கு கட்டுப்பட்ட வகையில் பேசவும் அரசியல் வாதிகள் கற்றுக் கொள்ள வேண்டும்.

அமைச்சர் என்றால், ஆளுந்தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர் என்றால் எதுவும் பேசலாம் என்ற நினைப்பு அவ்வளவு நல்லதல்ல.

அவ்வகையில் மேற்கூறிய விடயத்தில் அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே தமிழ் மக்களின் மனங்களைப் புண்படுத்தும் வகையில் பல தடைவைகள் பேசியுள்ளார் என்ற குற்றச்சாட்டுக்களை தமிழ் மக்கள் நினைவுபடுத்திக் கொள்கின்றனர்.

இத்தகையதோர் துர்ப்பாக்கிய நிலையை அரசியல் தலைவர்கள் முதல் சமானியர் வரை எவரும் தமக்கு ஏற்படுத்திக் கொள்ளக் கூடாது என்பதே பொதுவான எதிர்பார்ப்பாகும்.

# பயங்கரவாதத்துக்கு எதிராக சர்வதேசம் ஒன்றிணைய வேண்டும் - ரோகித

(கொழும்பு)

பயங்கரவாதத்துக்கு எதிராக சர்வதேசம் ஒன்றிணைய வேண்டிய தேவையை அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே மீதான தற் கொலைக் குண்டுத்தாக்குதல் ஏற்படுத்தியிருப்பதாக வெளிவிவகார அமைச்சர் தெரிவித்துள்ளார்.

பயங்கரவாதத்துக்கு எதிரான தமது நடவடிக்கைகளை வேகப்படுத்தி அவற்றைப் பலப்படுத்த வேண்டிய தேவையையும் இந்தத் தாக்குதல் ஏற்படுத்தியிருப்பதாக வெளிவிவகார அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமை கம்பஹா வெலிவேரிய பகுதியில் இடம்பெற்ற தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் நெடுஞ்சாலைகள் மற்றும் வீதி அபிவிருத்தி அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே உட்பட 15பேர் கொல்லப்பட்டும் 55 பேர் காயமடைந்தும் உள்ளனர். இந்தப் படுகொலைச் சம்பவத்தை வன்மையாகக் கண்டிப்பதாக வெளிவிவகார அமைச்சின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவமானது பயங்கரவாதத்துக்கு எதிராக சர்வதேசம் ஒன்றிணைந்து பயங்கரவாதத்துக்கு எதிரான தமது நடவடிக்கைகளை இரட்டிப்பாக்க வேண்டும் என்பதை உறுதிப்படுத்தியுள்ளது என வெளிவிவகார அமைச்சர் ரோகித போகொல்லாகமவின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பயங்கரவாதத்தை முற்றாக ஒழித்து வடக்கில் பயங்கரவாதிகளின் பிடிகளில் சிக்கியிருக்கும் மக்களை விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுத்திருப்பதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை இலங்கைக்கு உதவி வழங்கும் சர்வதேச நாடுகளான ஐக்கிய அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம், ஜப்பான் உள்ளிட்ட நாடுகள் இலங்கையில் தொடர்ச்சியாக இடம்பெற்றுவரும் வன்முறைகள் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டு, பிரச்சினைகள் தீர்க்கப்படவேண்டுமெனத் தொடர்ந்தும் வலியுறுத்தி வருகின்றமை இங்கு குறிப்பிடத்தக்கது. (அ-5)



# காங்கேசன் சீமெந்து தொழிற்சாலையில் 300மில்லியன் முதலீடு செய்யக்கோரிக்கை

(கொழும்பு)

அரசாங்கத்தின் உட்கட்டமைப்பு அபிவிருத்திப்பணிகள் மந்தகதியில் முன்னெடுக்கப்படுவதால் உள்ளூர் சீமெந்துத் தொழில் பெருமளவு பாதிக்கப்பட்டுள்ளதாக சீமெந்து உற்பத்தியாளர்கள் தெரி வித்துள்ளனர்.

வருடாந்தம் 6.8 வீத வளர்ச்சியைக் கண்டு வந்த இலங்கையின் சீமெந்து உற்பத்தி கடந்த வருடத்தில் 6.5 வீதமாக வீழ்ச்சியடைந்துள்ளதாக ஹொல்சிம் லங்கா சீமெந்து நிறுவனத்தின் முகாமையாளர் சமித ரத்னாயக்க தெரிவித்துள்ளார்.

நாட்டின் போர்ச்சூழலே இந்த வீழ்ச்சிக்கான காரணம் எனக் குறிப்பிட்டிருக்கும் சமித ரத்னாயக்க குறிப்பாக வடக்குக் கிழக்கு பகுதிகளில் நிலவும் மோதல் சூழ்நிலைகளினால் அப் பகுதிகளில் அபிவிருத்திப்பணிகள் நடைபெறாதிருப்பதாகவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

கிழக்கு மாகாணம் விடுவிக்கப்பட்டிருக்கின்ற நிலையில் நாட்டின் சீமெந்து விநியோகம் கடந்த வருடத்தின் முதல் 11 மாதங்களில் 6.2 வீத உள்ளூர் விநியோகம் அடங்கலாக ,10.7 வீதத்தினால் அதிகரித்துள்ளதாகக் குறிப்பிடப் பட்டுள்ளது. இந்த அதிகரிப்பு 3.4 மில்லியன் மெற்றிக் தொன்களாகும்.

இதேவேளை, கடந்த வருடம் சீமெந்து இறக்குமதி 14.5 வீதமாக அதிகரித்துள்ளதாகவும் மத்திய வங்கியின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. கம்பஹா மற்றும் கொழும்பு மாவட்டங்களிலேயே 40 வீதத்துக்கும் அதிகமான சீமெந்து விற்பனை இடம்பெறுவதாக ஹொல்சிம் லங்கா சீமெந்து நிறுவனத்தின் முகாமையாளர் சமித ரத்னாயக்க தெரிவித்துள்ளார்.

ஹொல்சிம் நிறுவனத்தின் 85 வீதமான வருமானம் வீடுகள் மற்றும் கட்டடங்கள் மூலமே கிடைப்பதாகவும் மீதி 15 வீதமான வருமானம் அரசாங்கத்தின் உட்கட்டமைப்பு அபிவிருத்திகள் மூலம் கிடைப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதற்கிடையில் காங்கேசன்துறை சீமெந்துத்தொழிற்சாலையில் சுமார் 300 மில்லியன் ரூபாய்களை முதலீடுசெய்வதற்கான அனுமதியை பிர்லா குறூப் நிறுவனம் அரசாங்கத்திடம் கோரியிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது. (அ-5)

# பதில் செயலாளர் நாயகத்தின் நியமனத்திற்கு எதிராக பாராளுமன்றத்தில் இன்று ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

பாராளுமன்ற பதில் செயலாளராக தம்மிக்க கித்துல்கொட ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவால் நியமிக்கப்பட்டிருப்பதற்கு எதிர்ப்புத்தெரிவித்து எதிர்க்கட்சிகள் இணைந்து இன்று செவ்வாய்க் கிழமை பாராளுமன்றத்தில் ஆர்ப்பாட்டங்களை நடத்தவிருப்பதுடன் பாராளுமன்ற செயற்பாடுகளை குறைப்பதற்கும் தீர்மானித்துள்ளனர்.

கித்துல்கொட தற்காலிகமாக 14 நாட்களுக்கு மாத்திரமே பதில் செயலாளர் நாயகமாக நியமிக்கப்பட்டுள்ள போதும் இந்த நியமனமானது அரசியல் அமைப்புக்கு உட்பட்டதல்ல எனவும் சட்டவிரோதமானது என்ற நிலைப்பாட்டிலேயே ஐக்கிய தேசியக்கட்சி தொடர்ந்தும் உள்ளது.

அரசியலமைப்புச்சபையின் அனுமதியுடனேயே இந்த நியமனம் ஏற்படுத்தப் படவேண்டும். பாராளுமன்ற செயலாளரை 14 நாட்களுக்குக்கூட நியமிப்பதற்கான அதிகாரம் அவருக்கு இல்லை. அவ்வாறு நியமனம் வழங்கினாலும் இந்த நிய மனம் சட்டவிரோதமானது என்று தெரிந்து கொண்டும் சுய மரியாதை இன்றி அதனை ஏற்றுக்கொண்டுள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக பாராளு மன்றத்தில் இன்று குரல் எழுப்ப ஐக்கிய தேசியக்கட்சி தீர்மானித்துள்ளது என ஐக்கிய தேசியக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியல்ல தெரிவித்துள்ளார்.

இந்த விடயத்தில் அரசாங்கத்தின் பதிலைப்பொறுத்து பாராளுமன்றத்திற்கு வெளியிலும் ஆர்ப்பாட்டங்களை முன்னெடுக்கப்போவதாக அவர் குறிப்பிட்டார். தம்மிக்க கித்துல்கொடவின் நியமனத்திற்கு ஜே.வி.பியும் தனது எதிர்ப்பை காண்பித்துவருகிறது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் இந்த நியமனத்தை நாங்கள் ஏற்றுக்கொள்ளப்போவதில்லை. இது அரசியலமைப்புக்கு முரணானது இந்த விடயம் தொடர்பாக பாராளுமன்றத்தில் தொடர்ச்சி யான எதிர்ப்புப்போராட்டங்களை முன்னெடுக்கவுள்ளோம். பாராளுமன்றத்தில் இன்று முன்னெடுக்கப்படவிருக்கும் எதிர்ப்புக்கு அரசாங்கத்தரப்பிலிருந்து கிடைக்கும் பதிலைப்பொறுத்தே அடுத்த கட்ட நடவடிக்கைகள் குறித்து தீர்மானிக்கப்படும் என ஜே.வி.பியின் பாராளுமன்ற உறுப்பினர் பிமல் ரட்ணாயக்க கூறியுள்ளார்.

இதேவேளை, பாராளுமன்ற செயலாளர் நாயகத்திற்கான நியமனம் அரசியல் அமைப்புச் சபையின் அனுமதியுடனேயே மேற்கொள்ளப்படவேண்டும் என தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் பாராளுமன்ற குழுத்தலைவர் இரா.சம்பந்தன் தெரி வித்துள்ளார்.

சிறுபான்மைக் கட்சிகள் அரசியலமைப்புச்சபைக்கான பிரதிநிதிகளை தெரிவு செய்துள்ள போதும் ஏன் இன்னமும் அரசியலமைப்புச்சபை உருவாக்கப்படவில்லை? அரசியல் அமைப்புச்சபையை ஏற்படுத்தி அதன் ஊடாகவே இந்த நியமனங்களை மேற்கொள்ளவேண்டும். அதில் ஏதாவது பிரச்சினை இருக்குமாயின் 17ஆவது திருத்தச்சட்டமூலத்திற்கமைய தீர்க்கமுடியும் என சம்பந்தன் கூறியுள்ளார்.

இது இவ்விதமிருக்க இந்த விடயம் தொடர்பாக பாராளுமன்ற பதில் செயலாளர் கித்துல்கொடவுக்கு எழுத்துமூலம் அறிவிக்க இருப்பதாக தொழில்சார் அமைப்புக்களின் ஒன்றியத்தின் தலைவர் எல்மோ பெரேரா தெரிவித்துள்ளார். (அ-5)

ஓலைச் சுவடிகள் 10

## தெரிந்த கதையும் தெரியாத அர்த்தமும்

### நம்பிக்கைகளும் ஆசாரங்களும்

***கிரகண நேரம் சூரியனைப் பார்க்கலாமா?***

கிரகண நேரம் சூரியனைப் பார்க்கக்கூடாது என்று பெரியோர் கூறும் போது அதை மூட நம்பிக்கை என்று இளைய தலைமுறை கூறிவந் தது. ஆனால் இது கண்ணுக்குக்கெடுதல் உண்டாக்கும் என்று நவீன சாஸ்திரம் கூறுகிறது.

கிரகண நேரம் மட்டுமல்ல எப்போது சூரியனை நேரடியகப் பார்த் தாலும் கண்ணில் பதியும் சூரியப் பிரதி விம்பத்துக்கு கண்ணின் விழி வெண்படலத்தை சுடுமளவுக்கு வெப்பமுண்டு. சாதாரண நேரத்தில் சூரியனை நேரடியாகப் பார்க்கும் போது ஒளியின் தீவிரம் காரணமாக கண் இமைகள் மூடிக்கொள்ளும். ஆனால் கிரகணத்தின் போது சூரியனின் பெரும் பாகத்தை சந்திரன் மறைக் கின்றது. அதனால் ஒளியின் தீவிரம் குறையும், கண் இமைகளும் ஏறத்தாள முழுமையாகத்திறந்திருக்கும். சூரிய ஒளியின் சிறு அம்சமாவது கண்ணில் படியும் போது பிரகாசம் கண்ணுக்குள் புகுந்து விழிவெண்டபலத்தை சுட்டுவிட வாய்ப்புண்டு. சூரியனின் சிறிய அம்சத்திலிருந்து வரும் ஒளிக்கதிர்கூட, பூரண சூரிய பிரதிவிம்பத்தின் அளவு வெப்பத்துடன் வருகின்றது எனப்தை கண்டறிந்துள்ளனர். இதனால் தான் கிரகண நேரத்தில் சூரியனைப் பார்க்கக் கூடாது என்பார்கள்.



நாடாளுமன்றில் வைக்கப்பட்டிருந்த அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளேயின் பூதவுடலுக்கு அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் அஞ்சலி செலுத்துவதையும், அமைச்சரின் மனைவி மற்றும் பிள்ளைகளையும், ஜனாதிபதி, எதிர்க்கட்சித் தலைவர் மற்றும் பிரதமர் ஆகியோரையும் படங்களில் காணலாம்.

# இலங்கைக்கு எதிரான பேரணிகளுக்கு அனைத்துலக மன்னிப்புச் சபை ஏற்பாடு

இலங்கையில் இடம்பெற்று வரும் மனித உரிமை மீறல்களுக்கு எதிரான பேரணிகளை நியூயோர்க்கிலுள்ள இலங்கையின் அலுவலகங்களுக்கு முன்பாக நடத்துவதற்கு அனைத்துலக மன்னிப்புச் சபை தீர்மானித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது, அனைத்துலக மன்னிப்புச் சபையைச் சேர்ந்த 4 ஆயிரம் தொண்டர்கள் இலங்கை, மியான்மார், டாபூர் (சூடான்), போபான் (இந்தியா), லிபியா ஆகிய நாடுகளில் இடம்பெற்று வரும் மனித உரிமை மீறல்களுக்கு எதிரான பேரணிகளை நடத்தத் திட்டமிட்டுள்ளனர்.

எதிர்வரும் 11ஆம் திகதி நடைபெறும் இந்த எதிர்ப்புப் பேரணி நியூயோர்க்கிலுள்ள வெளிநாட்டுத் தூதரகங்கள், ஐ.நா. அலுவலங்களின் முன்பாக நடைபெறவுள்ளது. அமெரிக்காவின் 10 மாகாணங்களைச் சேர்ந்த தொண்டர்கள் இந்த நடவடிக்கையில் ஈடுபடவுள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (சு)

# மடுப் பிரதேச மோதல்களை நிறுத்தக் கோரி பிரார்த்தனை

மன்னார் மாவட்டத்தில் அரச படைகளுக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் தொடர்கின்ற உக்கிரச் சண்டைகளில் சிக்கியிருக்கும் மடுமாதா ஆலயப் பகுதியை யுத்த சூழலற்ற சமாதான வலயமாக்க வேண்டும் எனக்கோரி நேற்று வவுனியாவில் விசேட வழிபாடு நடைபெற்றுள்ளது.

இந்த வழிபாட்டையடுத்து ஜனாதிபதிக்கு அனுப்பிவைப்பதற்கான கோரிக்கை அடங்கிய மகஜர் ஒன்றும் வவுனியா அரசாங்க அதிபரிடம் மன்னார் ஆயர் தலைமையிலான கத்தோலிக்க மதகுருக்களினால் கையளிக்கப்பட்டிருக்கின்றது.

இந்த பூஜை வழிபாடு நேற்று வவுனியா இறம்பைக்குளம் அந்தோனியார் ஆலயத்தில் நடைபெற்றது. இதில் பெரும் எண்ணிக்கையிலான பொதுமக்களும் அருட்தந்தையர்கள், அருட்சகோதரிகள் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

மடு பிரதேசப் பகுதியில் இடம்பெறுகின்ற கடுமையான மோதல்கள் காரணமாக மடுமாதாவின் திருச்சொரூபம் பாதுகாப்புக்காக அங்கிருந்து வேறிடத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டிருக்கின்றது.

மடுமாதாவும் யுத்த சூழலினால் பாதிக்கப்பட்ட பொதுமக்களைப்போன்று இடம்பெயர்ந்துள்ளமையானது பொதுமக்கள் மத்தியில் பெரும் கவலையைத் தோற்றுவித்திருக்கின்றது என்று கூட்டத்தில் கலந்துகொண்ட பொதுமக்கள் கருத்து வெளியிட்டுள்ளனர். (ச-5)

# பத்திரிகையாளரின் சகோதரன் மட்டக்களப்பில் கடத்தல்

(கொழும்பு)

வீரகேசரி பத்திரிகையாளர் லட்சுமணன் தேவ அதிரனுடைய சகோதரர் மட்டக்களப்பில் வைத்து இனந்தெரியாத ஆயுததாரிகளினால் கடத்திச் செல்லப்பட்டுள்ளார்.

மட்டக்களப்பு சின்ன ஊரணிப் பகுதியில் வசித்து வந்த 23 வயதுடைய லட்சுமணன் தேவ சன்ஜீவன் என்பவரே கடத்தப்பட்டவராவார்.

கட்டடத் தொழிலாளியான இவருடன், மோட்டார்சைக்கிளில் சென்ற சக தொழிலாளியான 33 வயதுடைய பேரின்பராசன் புவிபாலன் என்பவரும் காணாமல்போயுள்ளார்.

மட்டக்களப்பில் இருந்து தேற்றா தீவுக்கு தொழில் நிமித்தம் கடந்த 23ஆம் திகதி சென்ற இவர்கள் இதுவரை வீடு திரும்பவில்லை என பெற்றோர், மட்டக்களப்பு மனித உரிமைகள் ஆணைக்குழு மற்றும் செஞ்சிலுவை அனைத்துலக சங்கம் என்பவற்றில் முறைப்பாடு செய்துள்ளார்.

இவர்கள் பயணம் செய்த மோட்டார் சைக்கிளும் இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை. இவர்களை தாம் கைது செய்யவில்லை என படையினரும் பொலிஸாரும் தெரிவித்துள்ளனர். (ச-5)

# சூரிய மண்டலத்தை ஒத்த நட்சத்திர மண்டலம் கண்டுபிடிப்பு

(லண்டன்)

சூரிய மண்டலத்தையொத்த கோள்களைக் கொண்ட நட்சத்திரமொன்றை விண்வெளி ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர். இதன் பிரகாரம் சூரியனைவிட அரைப்பங்கு அளவான நட்சத்திரமொன்றின் நீளவட்டப்பாதையில் ஜூபிட்டர் மற்றும் சனிக்கிரகத்தையொத்த இரு கோள்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

பூமியிலிருந்து சுமார் 5 ஆயிரம் ஒளி யாண்டுகள் தொலைவிலுள்ள இந்த நட்சத்திரத்தின் நீளவட்டப் பாதையிலுள்ள கோள்களின் கண்டுபிடிப்பானது,

பூமியையொத்த கோள்கள் பிரபஞ்சத்தில் இருக்கக்கூடிய சாத்தியப்பாட்டை உறுதிப்படுத்துவதாக உள்ளது. (ச)

# ஐந்து மாத காலத்திற்குள் விசேட அடையாள அட்டை

(கொழும்பு)

யாழ்.மாவட்ட மக்களுக்குரிய விசேட அடையாள அட்டைகள் எதிர்வரும் ஐந்து மாத காலத்துக்குள் வழங்கப்படவுள்ளதாக யாழ்.மாவட்ட இராணுவத் தளபதி தெரிவித்துள்ளார்.

அண்மையில் கொழும்பிலிருந்து யாழ். வந்த ஊடகவியலாளர்களுக்கு இது தெரிவிக்கப்பட்டதாக பி.ரி.எ. செய்தி நிறுவனத்தின் செய்தியாளர் சிறிராம், பி.பி.ஸிக்கு தெரிவித்துள்ளார்.

இந்த அடையாள அட்டையின் மூலம் குறித்த நபரின் முழு விபரங்களையும் கணனியின் உதவியுடன் அறிய முடியும் என்று இராணுவத் தளபதி தெரிவித்துள்ளார்.

இந்த விசேட அடையாள அட்டையின் மூலம் கொழும்பு-யாழ். பிரயாண நடவடிக்கையை இலகுவாக மேற்கொள்ளலாம் என்று யாழ். மாவட்ட இராணுவத் தளபதி ஜி.ஏ.சந்திரசிறி தெரிவித்ததாக சிறிராம் கூறியுள்ளார். (ச-2)

## முகமாலையில்...

பதுங்கு குழிகள் மீது தாக்குதல் நடத்தப்பட்டிருப்பதாகவும் விமானப்படை பேச்சாளர் விங் கொமாண்டர் அன்ரு விஜய சூரிய கூறியுள்ளார். இந்தத் தாக்குதல்களில் விடுதலைப் புலிகளுக்கு இழப்புக்கள் ஏற்பட்டிருப்பதாக அவர் தெரிவித்துள்ளார். (ச-5)

## மடுவைக் கைப்பற்றுவதற்...

ஜெனரல் ஜெகத் ஜெயசூரிய மடுப்பகுதி மீதான தாக்குதலின்போது மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக மன்னார் மறைமாவட்ட ஆயருடன் கலந்துரையாடல்களை மேற்கொள்ள திட்டமிட்டிருந்தார். ஆனால் அது கைகூடவில்லை.

ஆனால் கன்னி மாதா சிலை விடுதலைப் புலிகளின் பாதுகாப்பான கட்டுப்பாட்டுப் பிரதேசத்திற்குக் கொண்டு செல்லப்பட்டு விட்டது. இந்தச் செய்தியை ஜனாதிபதி மகிந்தவுக்குப் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ கடந்த வியாழக்கிழமை மாலை தெரிவித்திருந்தார்.

இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் றொபேட் ஓ பிளேக் தன்னிடம் மன்னாரிலுள்ள மடுத் தேவாலய புனிதப் பிரதேசத்தில் படை நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றதா? என்று கேட்டிருந்ததாகவும் கோத்தபாய ராஜபக்ஷ, மகிந்த ராஜபக்ஷவிடம் தெரிவித்திருந்தார்.

அமெரிக்காவில் நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலையொட்டி போப் ஆண்டவர் 16-வது பெனடிற் விரைவில் அமெரிக்கா செல்லவுள்ளமை குறிப்பிடத்தக்கது. எனினும் அமெரிக்கத் தூதுவர் உள்நாட்டு விவகாரங்களில் அதிகம் தலையிடுவதாக மகிந்த ராஜபக்ஷ தனக்கு நெருக்கமானவர்களிடம் தெரிவித்திருந்தார்.

மேலும் மடுவிற்கு எந்தப் பாதையால் இலகுவாகச் செல்ல முடியும் என்பதனை ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜெயலத் ஜெயவர்த்தன கடந்த வியாழக்கிழமை தொலைபேசி மூலம் மகிந்த ராஜபக்ஷவுக்குத் தெரிவித்திருந்தார்.

எனினும் அதனைக் கேட்டு ஆத்திரமடைந்த மகிந்த ராஜபக்ஷ, ஜனாதிபதியாக நான் உள்ள போதும் என்ன செய்ய வேண்டும் என்பதனையே படையினருக்கு தெரிவிக்க முடியும். எப்படிச் செய்ய வேண்டும் என்பதனையல்ல என்று பதிலளித்துள்ளார்.

கத்தோலிக்க மக்களின் வாக்குகளை கவர்வதற்காக ஜனாதிபதி தேர்தலின்போது மடுவுக்குச் செல்லவும் மகிந்த ராஜபக்ஷ விரும்பியிருந்தரர்.

தற்போது இராணுவம் மடுவை நெருங்கி வருகையில் கன்னி மாதா சிலை அங்கிருந்து அகற்றப்பட்டது மிகப் பெரும் இழப்பாக அமைந்துவிட்டது என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-5)


## சதா பொன்ஸ் கல்வி நிலையம்

மாலு சந்தி, அல்வாய்.

45 வருட தன்னிகரில்லா சேவையில்

வடமராட்சியில் ஒரே நிறுவனம்.

O/L மீட்டல் வகுப்புக்கள் 09.04.2008 புதன்கிழமை காலை 8 மணிக்கு ஆரம்பம்.

துரித மீட்டல் வகுப்புகளுக்கென பயிற்சி பெற்ற ஆசிரியர் குழாம்.

பதிவுகள் நடைபெறுகின்றன.

A/L மாணவர்களுக்கான பிரத்தியேக வகுப்புக்கள் (கலைப் பிரிவு) நடைபெறுகின்றது.

(C-973)


## குடும்பஸ்தர் இருவர்...

சுட்டுக்கொல்லப்பட்டவர்கள் ஆவர்.

இப் பகுதியில் சுற்றுக்காவல் நடவடிக்கை யில் ஈடுபட்டிருந்த அதிரடிப்படையினரை இலக்குவைத்து நேற்றுக்காலை 8.30 மணிக்கு கிளைமோர் தாக்குதல் இடம்பெற்ற தாக கூறப்படுகின்றது.

கிளைமோர் தாக்குதலையடுத்து அதிரடிப் படையினர் அப்பகுதியில் கண்மூடித்தனமான துப்பாக்கிச் சூட்டை நடத்தினர். அத்துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகியே இவர்கள் இருவரும் பலியானதாக பிரதேச தகவல்கள் தெரிவிக்கின்றன.

இச்சம்பவம் குறித்து பாதுகாப்பு அமைச்சு தெரிவிக்கையில், அதிரடிப்படையினர் கிளைமோர் தாக்குதலை நடத்திய இரண்டு விடுதலைப்புலிகளை சுட்டுக்கொன்றிருக்கின்ற னர் என்று தெரிவித்துள்ளது. (ச-5)


## MATHS CENTRE

M.M.N ROAD - NELLIADY

❖ வடமராட்சியில் உள்ள சிறந்த ஆசிரியர் குழுவினால் போதிக்கப்படும்.

❖ புதிய பிரிவு (கலை)

ஆரம்பம் :- 09.04.2008 புதன்

A.M. 7.00

(அனுமதிகள் வழங்கப்படுகின்றன)

(C-970)


## அமைச்சர்...

எடுத்துச் செல்லப்பட்டு இறுதிக் கிரியைகள் நடக்கும் வரை மக்களின் அஞ்சலிக்காக அங்கே வைக்கப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

மறைந்த அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளேயின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் வியாழக்கிழமை பூரண அரச மரியாதையுடன் இடம்பெறவுள்ளது.

கம்பஹா வெலிவேரியவில் நேற்று முன்தினம் காலை இடம்பெற்ற தற்கொலை குண்டுத் தாக்குதலில் அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே உட்பட 15 பேர் கொல்லப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-5)

## அமைச்சர் ஜெயராஜின்...

வன்மையாக கண்டிக்கின்றோம். ஐரோப்பிய ஒன்றியம் பொதுமக்கள் மீதான சகல வடிவிலான தாக்குதல்களையும் வன்மையாகக் கண்டிக்கின்றது.

பிரச்சினைக்கு இராணுவ ரீதியில் தீர்வு காண முடியாது என ஐரோப்பிய ஒன்றியம் தொடர்ந்து நம்புகின்றது. பேச்சுவார்த்தை ஊடான அரசியல் அணுகுமுறை மூலமே இலங்கையின் இனப்பிரச்சினைக்கு தீர்வு காண முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-5)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3, இரண்டாம் ஒழுங்கை பிரவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 08.04.2008இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.